

சிலம்பு ௫ | திருவள்ளுவர் ஆண்டு ௧௯௮௨, மாசி | பரல் ௭
மார்ச்சு, 1951

புலவர்ப் போற்றல்

[சித்தாந்தபண்டிதர், புலவர், ப. இராமநாதபிள்ளை.]

தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராம் சான்றவர் புலவர் எனப்படுவர். புலம் என்பது: அறிவு, கல்வி, கலை, மெய்யுணர்வு, புலனடக்கம், நிலம் முதலிய பல பொருள் தரும் ஒரு சொல். ஒரு நாட்டின் சிறப்பு அந் நாட்டுப் புலவர்களையும் அவர்கள் ஆக்கியுள்ள அரும் பெரும் பொன்றாப் புகழ்சேர் மெய்ந்நூல்களையும் கொண்டே எல்லாரானும் மதிப்பிடப்பெறும். புலவர்களே நாட்டின் உயிராவர்; மன்னன்றன் மாண்புயிரும் ஆவர். வேந்தன் விழையுயிரும் அவரே. தலைவன் தனி உயிரும் அவரே. உயிரின்வழி உடல் செல்லுகின்றது. உயிர் உடலை ஓம்புகின்றது. உயிர் உடலால் உறுபயன் பெறுகின்றது.

அதுபோலவே, புலவர்களும் நாட்டுக்கும் தலைவர்கட்கும் நன்மக்கட்கும் உயிராகத் திகழ்கின்றனர். அந் நாளில் மக்களும், மக்கள் தலைவராகிய மன்னரும், மன்னர் தலைவராகிய வேந்தரும் செந்நாப்புலவர் வழிநின்று அவர்களையே தலைவராகக்கொண்டு வாழ்ந்துவந்தனர். அதனால், தீமை அறவே மாய்ந்து, நன்மை வாய்ந்து நாடு செழித்து நலமுற்றது. 'பெரும் பொருளால் பெட்டக்க தாகி அருங்கேட்டால், ஆற்ற விளைந்தது நாடு' அது, 'பொறை யொருங்கு மேல்வருங்கால் தாங்கும்' நிறையும் பெற்றது.

புலவர்கள் மெய்ந்நெறிக்கண் நின்று மெய்ந்நூல் இயற்றி அருளினர். அந்நூல்வழித் தாங்கள் ஒழுகினதுபோல் ஏனையாரையும் ஒழுகச் செய்தனர். அதனால் அவர்கள் வல்லார் என்னும் வண்பெயர் பெற்றனர். அவரை அடுத்து அன்பும்

பணிவுமாக ஒழுகக் கற்றுக்கொண்டவர் நல்லார் என்னும் நற்பெயர் பெற்றனர் இவ்வுண்மை, வரும் அடிகளால் விளங்கும்.

" வல்லாரை வழிபட் டொன்றறிந் தான்போல்
நல்லார்கட் டோன்று மடக்கமு முடையன் "

—கலித்தொகை, குறிஞ்சி-௧௧.

புலவர்கள் பொருளுண்மைகண்டு போற்றினர். மெய்ப்பொருளின் தெளிவால் 'மேலோர்க்கு மேலோர்க்கும் மேலாயினர்' உலகம் அவர்களைத் தெய்வம் எனக் கொண்டது. உவந்து பேணிற்று அதனால் தெய்வத்திற்கும் 'புலவ'ரெனப் பெயர உண்டாயிற்று. இவ்வுண்மை பத்துப் பாட்டுள் தலையாய திருமுருகாற்றுப்படையின்கண் ஒப்பில்லாப் புலமையோய் என உள்ளம் உருகி, அன்பு பள்ளமடை வெள்ளமெனப் பாயப் பகர்ந்த பயனார் மொழியால் உணரலாம்.

அது,

" நின்னளந் தறிதல் மன்னுயிர்க் கருமையின்
நின்னடி யுள்ளி வந்தனென் நின்னொடு
புரையுந ரில்லாப் புலமை யோயென."

—பத்துப். திருமுருகு. உ௭அ-அ0.

புலவர்களைப் புரவலரும் மன்னரும் வேந்தரும் உயிரினும் சிறந்தாராக ஓம்பி வந்தனர். அவர்கள் அரும் பெரும் உறுதிமொழிகளை தாங்கள் பெறவேண்டிய பெரும் பேறெனக் கருதினர். அவர்வழி நின்று அறம் பல புரிந்தனர். இழத்தற்றுன்பம் எல்லாவற்றினும் ஈடு செய்யவொண்ணாத் துன்பம் மிக்கது, அவர்தம் கூட்டுறவு இழத்தலே என எண்ணி இன்று வஞ்சினங் கூறுங்கால் அவ்விழப்பினையே மிக்கெடுத்துக் கூறினர் இவ்வுண்மை, பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற **நெடுஞ்செழியன்** கூறிய வஞ்சினப் பாட்டால் விளங்கும்.

" ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகவென் நிலவரை." —புறம் - ௭உ.

புலவர்கள் 'சொல்லேர் உழவர்' என்னும் தூய திருப்பெயரும் உடையர். அவர்கள் மக்களை நல்வழிப்படுத்தி அறிவாகிய உயிருணர்வு விளைக்கும் உழவராவர். அவர்களுக்குக் கேட்பார் செவியே விளைநிலமாகும்; தொன்மைச் சான்றோர் தோற்றுவித்தருளிய நன்மை மொழி நிரம்பும் நயமார் நூல் உரைகளே நீராகும்; தம் பொய்யா நாவே மெய்யாம் ஏராகும்; தம்பால் கேட்பார் செவியில் தீமொழி புகவொட்டாமல் களைவதே களையாகும்; அறிவுமொழியே விதையாகும்; கேட்பார்

உளத்துக் (ஆன்மா) கண் விறீட்டெழும் பேரின்பப் பெருவாழ் வாம் மெய்யுணர்வே விளைவாகும்; இவ்விளைவே உயிர் உண வாகும். இவ்வுண்மை,

"பொதுமொழி பிறர்க்கின்றி முழுதாளுஞ் செல்வர்க்கு
மதிமொழி யிடன்மாலே வினைவாபோல் வல்லவர்
செதுமொழி சீத்த செவிசெறு வாக
முதுமொழி நீராப் புலன்நா உழவர்......"
—கலித்தொகை, மருதக்கலி, ௯.

என்னும், 'கற்றறிந்தார் ஏத்தும் கலித்தொகைத்' திருப்பாட்டால் விளங்கும். மேலும், இவ்வறிவே பேராவியற்கைப் பேரின்பப் பெருவாழ்வை நல்கும் ஆண்டவன் திருவடிப் பேற்றுக்கு உரித் தாம அருளை விளைவிப்பதுமாகும். இவ்வுண்மை,

மெய்ம்மையாம் உழவைச் செய்து விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்மமையாம களையை வாஙகிப் பொறையெனும் நீரைப் பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டு தகவெனும் வேலி யிட்டுச்
செம்மையுள் நிற்ப ராகில் சிவகதி விளையும் அன்றே.
—ஆளுடைய அரசு, ௪-எசு—உ.

என்னும் திருமுறைத் திருப்பாட்டாலு முணரலாம்.

இச்சிறப்பெல்லாம் உள்ளடக்கியே நம் திருவள்ளுவப் பெருந்தகையார்,

"வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லோ உழவர் பகை" —திருக்குறள், அஎஉ

எனவும்,

"பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்" —திருக்குறள், ௪௫0.

எனவும் தாம அருளிய தமிழ்மறைக்கண் ஓதி அருள்வா ராயினர்.

புலவராவார் 'வேனிற் புனலன்ன' நலவராவர். 'களித் துக் கலந்தசோர் காதற்கசிவொடு காவிரிவாய்க் குளிப்பார்' புனல் வரவினைக்கண்டு தலைக்கூடி உவத்தலும், புனல் வடிவில் மீண்டும்புனல் வரவு என்ஞான்று கைகூடுங் கொல் என்று ஏங்கி நிற்றலும் இயல்பாக நிகழும் கிழமையுடையவராவர். இக்கிழமை இறைமாட்டு நிகழும் உயிரின் நிறைகிழமை ஆகும். குடும்பமும் நாடும் முற்றுக இத்தகைய கிழமை கொளளுதல் 'சென்ற இடமெல்லாம் சிறப'பெய்தும் செந்நாப் புலவர் ஒருவர் மாட்டேயாம. இதனல்,

"உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்" —திருக்குறள், ௬௪௪.

என வாயுறை வாழ்ததும் வழுத்துவதாயிற்று.

இதன் பொருள் : "தம்மை ஐந்து புலனும் பின்செல்லுறத் தகையராகிய" புலவர்கள் ஒருவருடன் உறவாடுங்கால், உறவாக ஏற்றுக்கொள்பவர்க்கு அளவிலாத மகிழ்ச்சி ஏற்படுதலும், சின்னாளிருந்து நன்னெறிப்படுத்திப் பிரியநேருங்கால் 'இனி எப்பொழுது காண்போம்,' என்று ஆழநினைந்து வருந்துமாறு பரிவு ஏற்படுதலும் விளைவிக்கும் நிறைபண்புகள் உடையவர்கள். இவையே அவர்தம் தொழில்கள். என்னை காரணமெனில்? உறவாக ஏற்றுக்கொண்டவர் நல்லொழுக்கத்தான் மிக்க இவரோடு கூடியதால் அறியாதனவெல்லாம் அறியப்பெற்றோம் என்றும், யாண்டு பலவாக நரையிலமாயினேமென்றும், பயனில் சாக்காட்டினின்று நீங்கி நயனுடை நல்வாழ்வு பெற்றனமென்றும், ஆயாது அல்லலுழக்கும் அலைகொலைபுரிய உன்னிய நம்மை அவற்றினின்றும் நீக்கி நிலையான புகழ் புண்ணியம் புலமை இவற்றின்கண் நிற்பிக்க நின்றோமென்றும், நெடுவாழ்வு தரும் வடுவில் அமிழ்தம் வாய்ப்பெய்து வாழ்வதினும் மிக்கது, அவர்தம் மொழியமிழ்தம் செவிவாய்ப்பெய்து தேக்கிச் செம்மாந்து உயிர் தளிர்க்க வாழும் வாழ்வு; அஃது எளிதிற் கைகூடப்பெற்றனமென்றும் இறுமாந்து இன்புற்று வாழ்தல். இவ்வுண்மைகளைக் கீழ்வரும் செந்தமிழ்த் திருப்பாட்டுக்கள் விளக்கும்.

"உற்றுழி யுதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே
பிறப்போ ரன்ன உடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயும்மனந் திரியும்
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக வென்னா தவருள்
அறிவுடை யோனா றரசுஞ் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கட் படுமே."—புறநானூறு, ௧௮௩.

கற்றவர்பால் கல்வி கற்பானும், தனக்குத் துணையாக அன்னாரை ஏற்றுக்கொள்வானும் "உடையார்முன் இல்லார்போல் ஏக்கறுதலாம்" ஆசையாற்றாழ்ந்து, வேண்டுவன வேண்டுங்காலத்து விழைவுடன் நல்கியும், பணிவும் பற்றும் உடையனாய்த் தொண்டுபூண்டும் உயிர்க்கு உறுதிபயக்கும் கல்வியைக் கற்றுக்கொள்ளுதல் வேண்டும். அக்கல்வியே சிறப்பினை நல்கும். 'ஈன்றஞான்றினும் பெரிதுவக்குமாறு' தாயினுக்கும் தனிச் சால்பினைத்தரும். நாட்டுத் தலைவரும் நன்கு வரவேற்று நானில மகிழத் தாம் நடக்கவேண்டிய அறமுறைகளைக் கேட்டுத் தெளிந்து கேடின்றிவாழும் பீடுறு பெட்பினை அன்னவர்க்கு ஈயும். எல்லார்க்கும் இன்றியமையாச் சிறப்பாம் குடிப்பிறப்பினைத்தரும். குடிபபிறப்பென்பது பண்பாடு; 'பண்புடை

யார்ப்பட்டுண்டு உலகம்' 'பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்' சுருங்கச்சொல்லின் 'தமக்கென முயலா நோன்தாள்' ளுடையராய்ப் 'பிறர்க்கென முயலும்' பெற்றியராதல்.

"வள்ளியோர்ப் படர்ந்து புள்ளிற் போகி
நெடிய வென்னாது சுரம்பல கடந்து
வடியா நாவின் வல்லாங்குப் பாடிப்
பெற்றது மகிழ்ந்து சுற்றம் அருத்தி
ஓம்பாது உண்டு கூம்பாது வீசி
வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கை
பிறர்க்குத் தீதறிந் தன்றோ வின்றே, திறப்பட
நண்ணார் நாண அண்ணாந் தேகி
ஆங்கினி தொழுகி னல்லது ஓங்குபுகழ்
மண்ணாள் செல்வம் எய்திய
நும்மோ ரன்ன செம்மலும் உடைத்தே." —புறநானூறு, ௪எ.

புலவர்கள் மன்னரை யொத்த தலைமைப்பாடு உடையர். எவர்க்கும் எவ்வகைத் தீதும் கனவினும் கண்ணாப் புண்ணியர். திருவினர் தம் சிறப்பறிய வேண்டுமே என்னும் வருத்தம் ஒன்றுமே உள்ளவர். பெற்றதற்கு மகிழும் பெரியவர். சுற்றம் பேணும் நற்றவர். 'வல்லாங்கு வாழ்து மென்னாது' எல்லார்க்கும் நல்கி இன்புறும் இயல்பினர். புலமைத் துறையில் மாறுபட்டாரை வீறுகொண்டு வெல்லும் ஈறிலாத் திறலினர். அவரைச் சார்ந்தார்க்கு அவ்வெல்லாம் இயல்பாகவே அமைகின்றன. அதனால், சார்ந்தவர் சால்பு குன்றாமல் நேர்ந்த இன்னல் அகற்றி இன்புறுகின்றனர். இச் செய்யுளின் குறிப்பும் ஒரு புலவரைத் தவறாக ஒற்றரெனக் கருதிக் கொல்லத்துவங்கிய மன்னனை நயம்பட அறிவுறுத்தி நன்னெறிப் படுத்தினமையும், புலவரைச் சாக்காட்டினின்று உய்யக்கொண்டமையும் விளக்குகின்றது.

"வலம்படு வாய்வா ளேந்தி யொன்னார்
களம்படக் கடந்த கழறொடித் தடக்கை
ஆர்கலி நறவின் அதியர் கோமான்
போரடு திருவிற் பொலந்தார் அஞ்சி
பால்புரை பிறைநுதற் பொலிந்த சென்னி
நீல மணிமிடற் றொருவன் போல
மன்னுக பெரும நீயே தொன்னிலைப்
பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியா
தாதல் நின்னகத் தடக்கிச்
சாதல் நீங்க எமக்கீத் தனையே." —புறநானூறு, ௯௧.

இப்பெரும் புலவர்கள் உலக அருட்குருவினர் ஆவர். இவர்கள் திருமேனியைக் காண்டலும், திருப்பெயரினைச் செப்பலும், திருமறையினைக் கேட்டலும், திருவுருவினை இடையறாது

நினைதலுமே மெய்யுணர்வாகும். இவையே "கற்றீண்டு மெய்ப் பொருள் கண்டார் தலைப்படுவர், மற்றீண்டு வாரா நெறி," என்னும் திருக்குறளின் எடுத்துக்காட்டுகளாகும்.

"தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுருச் சிந்தித்தல் தானே" —திருமந்திரம், ௧௩௩.

இத்தகைய பெரும்புலவர்கட்கு இடமிடந்தோறும் திருக்கோவில்கள் எடுப்பித்துத் தொழுகையாற்றி வழுவிலறம் புரிந்து வாழ்வாங்கு வாழ்வதே மக்கட் பண்பாகும். இவர்தம் திருவுருவ நிழலோவியங்களைப் பெரிதாக்கி அணிபெறச் செய்து இல்லங்கள், படிப்பகம், மன்றம், கழகம், கல்லூரி, பணிக்களம், வாணிகம், அலுவலகம், அரசநிலையம் முதலிய எல்லா இடங்களிலும் நிறுவல்வேண்டும். இத் திருவுருவங்களைக் காண்பார் கண்ணும் கருத்தும் மாண்பெய்தும். அதனால் நாடும் மொழியும் நலமுறும். கூடும் கூட்டுறவு பீடெய்தும். எல்லாரும் பகை யொழிந்து நகைவராவர்.

நம் கழகத்தார் நூற்றுக்கணக்கான பெரும்புலவர் வுருவப் படங்களைப் பெரிய அளவில் நல்முறையாக அமைத்துள்ளார்கள். அமைத்துக்கொண்டும் வருகின்றார்கள். இச் சீரிய திருநோக்கம் தமிழன்னையின் தண்ணருளால் கைகூடுவதாக. தமிழ்ப்பெரும அன்பர்கள் தங்கள்பால் உள்ள புலவர் பெருமக்கள் திருவுருவங்களை நம் கழகத்து இத் திருத்தொண்டுக்கு உதவுமாறு வேண்டுகின்றோம். அவ் வுருவங்களைக் கொண்டு பெரிதாக்குவித்ததும் அவற்றை அன்புடன் உதவிய அன்பர்கட்கு மீட்டும் அனுப்பிவைப்போம். தங்களுக்குத் தெரிந்த நண்பர்களுக்கும் இதனை அறிவுறுத்தி அவர்கள்பால் உள்ள புலவர் திருவுருவங்களை அனுப்புவிக்குமாறு செய்யத் துணை புரியவேண்டுகின்றோம்.

"புலவர் திருவுருவம் போற்றுவார் எல்லா
நலமும் பெறுவர்மொழி நாடு."

எம்முன் எழுந்தனாய்

[தென்கருணையூர், வேல்-இளவேந்தன்]

(மறைந்த மறைமலை அடிகளாரின் ஆன்மாவை இளைஞர்கட்குத் தமிழறிவுச்
செல்வம் நல்க விழைந்து அழைப்பதாக அமைத்துப்
பாடியுள்ளார் இதன் ஆசிரியர்.)

பல்லா வரப்பதி பண்புற வாழ்ந்து
பலகலை பெற்றுப் பாவலர் போற்றக்
கல்லா தவரெனக் காணவும் வைத்துக்
கைம்மா றகலாக் கருத்தினை முடித்து
நல்லா ரேங்கிட நாமுந் தயங்கிட
நம்மைவிட் டகன்ற நற்றமிழ்ச் செல்வா
இல்லா மெனயாம் இரவடை யாது
இன்புற எம்முன் எழுந்தரு ளாயே. (1)

பொதுநிலைக் கழகப் பொன்னொளி விளக்கே!
பொருப்பினில் விளங்குஞ் சிறப்புடை ஒளியே!
இதுவுமக் கழகோ இன்புறு செயலோ?
இன்ன லுறவெமை யிங்குவிட் டகன்று
முதுமையை வெறுத்தோ முதுதமிழ் விரும்பி
முன்னோ ளகன்றநற் றாட்டியை விழைந்தோ
எது? நிக ரில்லா எந்தமிழ்த் தாயை
எம்முன் எழுந்தரு ளாயே. (2)

செந்தமி ழன்னையின் கண்மணி யானாய்
செப்புதற் கரியதோர் திலகமு மானாய்
கந்தமி லாரியக் கருத்தினைத் தமிழில்
களைந்தெறிந் தேகலைக் கடலெனப் பெற்றாய்
மந்தமி லாய்வினை வளமுற நடத்தி
வான்புகழ் கொண்ட வனப்பினை யுடையோய்!
செந்தமி ழன்னைய தென்றமிழ் மலையே!
செவ்விதி னெம்முன் எழுந்தரு ளாயே. (3)

வளம்பெறக் காட்டினை வள்ளுவர் நெறியை
நலமுற நாட்டினை நந்தமிழ் வாழ்வில்
களத்தினிற் குட்டுவன் மறத்தையுங் காட்டி
கலைக்கட லானவன் உளத்தையுங் காட்டி
வளத்தினிற் றிகழ்ந்த வனப்புடை வாழ்வை
வாழ்வினிற் றுலங்கிடப் பண்ணிய தேவே!
இளமையிற் கழியா இளைஞரா மெமக்கிங்
கின்ப மளித்திட எழுந்தரு ளாயே. (4)

தொல்காப் பியத்தின் தொன்மையுங் காட்டித்
தோன்றிய பன்னூ லாய்வதுங் காட்டிப்
பல்காப் பியங்களின் பான்மையுங் காட்டிப்
பாரினிற் சீரிய நெறியையுங் காட்டி

ஒல்காப் பெருமபுகழ்த் தொல்காப் பியத்தின்
சந்த , க் கரியதோர கருத்துரை காட்டி
அல்லாப் ரவுரை அகலவே யோட்டிய
அரி ...ன! எம்முன் எழுந்தரு ளாயே. (5)

மணிமொழிப் பெருமான் மாண்பினை விளக்கி
மதிப்பிடற் கரியதோர காலமுங் காட்டி
மணிமொழிக் கொளியென மாண்புரை எழுதி
மண்ணவர் மகிழ்ந்திட மன்றினி லிட்டோய்!
அணியெனத் திகழ்ந்திட அரும்பத்துப் பாட்டின்
திறமுறு நூலகளுக் குரையினைத் தந்தோய்!
மணியெனத் தெளிவுரை தேக்கிய தேவே!
மண்ணவர் மகிழ்வுற எழுந்தரு ளாயே! (6)

நாடக நூல்களை நயந்தெமக் களித்தாய்
நம்மவர் வாழ்வோ டயலவர் வாழ்வாம்
பீடக மேலைநன் னாட்டவர் வாழ்வும்
பிறங்கிட எழுதிய பீடுடை யாளா!
வீடக வழியினை விளக்கிடும் ஞான
போதம் பொலிந்த பொன்னுரை கண்டோய்!
தேடவு முடியாத் தென்னவன் நாட்டுத்
தீந்தமிழ் எம்முன் எழுந்தரு ளாயே! (7)

அருந்தமிழ் நாட்டினி லயலவர் இந்தியைப்
பொருந்துறத் திணிப்பவே போருட னாற்றித்
திருந்தா முறையினர் நெறியினை விளக்கி
நம்படக் கூறிய சீருடை யாளா!
பொருந்தா இந்தி பொதுமொழி நிலைக்குப்
போக்கிட வேண்டுமிந் நாட்டைவிட் டென்றே
திருந்திட வெழுதிய திரைகட லனையோய்!
திறமுட னெம்முன் எழுந்தரு ளாயே. (8)

அறிவுக் கடலெனும் அருந்தமி ழிதனை
அரும்பெருஞ் சிறப்புட னச்சினி லேற்றி
நெறியுடை யணியாய் நேர்மையின் ஒளியாய்த்
தெருளினைப் பெருக்கிடத் தென்றமிழ்த் தாயினை
தறிவெனு முளத்தில் அழகுறப் புனைந்து
அன்பொடு வெளியிட்ட தணடமிழ்ப் பெரியோய்!
சிறியோ மெமையிங்குச் சிறப்புடன் வளர்த்திடச்
சீருட னெம்முன் எழுந்தரு ளாயே! (9)

ஐம்பதாண் டின்மே லருந்தமிழ்ப் பணியை
அறமுட னாற்றிய திறமுடைப் பெரியோய்!
ஐம்பதின் மேலாம் அருந்தமிழ் நூல்களை
அளித்தே அகமகிழ் வாற்றலைப் பெற்றோய்!
ஐம்பதிற் பெருக்கிய அருநூறின் மேலாம்
அருந்தமிழ் நூலக மொன்றமைத் திட்டோய்!
ஐம்பதாண் டாயினும் அன்புட னெம்மை
அணைத்து வளர்த்திட எழுந்தரு ளாயே. (10)

மொழியாராய்ச்சி

[அ. நக்கீரர்]

(சிலம்பு உஉ. பரல் ௫. கககூ-ம் பக்கத்தொடர்ச்சி)

சகடம்: சாகாடு—சகடு—சகட்+அம்—சகடம். "சகடம்" என்னும் இச்சொல் "சாகாடு" என்ற தமிழ்ச்சொல்லின் கண்ணுள்ள நெட்டெழுத்துக்களைக் குறுக்கி இறுதியில் 'அம்' சேர்த்து ஆக்கப்பட்டது. 'சா' என்ற நெடிலைச் சகரமாக்கிக் 'கா' என்ற நெடிலைக் ககரமாக்கி 'டு' என்ற ஈற்றிலுள்ள உகரம் கெடுத்து 'அம்' சேர்த்தனர் என்க.

"பீலி பெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்" (குறள்-௪௭௫)

என்ற திருக்குறளிலும்,

"கால்பார் கோத்து ஞாலத் தியக்கும்
காவற் சாகாடு" (புறம்-௧௮௫)

என்ற புறப்பாட்டின்கண்ணும், மற்றும் பிற இடங்களிலும் பண்டு "சாகாடு" என்று வழங்கியமை காண்க. சாகாடு சகடமாகி அதன் பொருள் மறையத் தொடங்க, மக்கள், "சூறுவளிக் காற்று" "அரைஞாண் கயிறு" என்பதுபோல, "சக்கடா வண்டி" என்று வழங்கத் தொடங்க முடிவில் அது, "ஜட்கா வண்டி" என்று சொல்லும் அளவுக்கு மாற்றமடைந்து வந்திருக்கிறது. இவ்வாறு அகர முதன் மொழிகள் பலவற்றின்மேற் சகரவொற்றுச் சேர்த்து மாற்றிப் பல சொற்கள் ஆக்கினதாலே,

"சகரக் கிளவியும் அவற் றோரற்றே
அ ஐ ஔ எனும் மூன்றலங் கடையே" (தொல், எழுத்: கூஉ)

என்ற தொல்காப்பிய நூற்பாவுக்குப் பொருள் கொள்ளுங்கால் பலர் திகைப்பு அடைய நேரிட்டது. அவை: "ஔ எனும் ஒன்றலங்கடையே" என்று பாடம் இருந்திருக்கவேண்டும் என்றும் சிலர் மயங்கினர். ஆசிரியர் இளம்பூரணர் எழுதிய தொல்காப்பிய உரையில் இந் நூற்பாவினடியில் 'சகடம்' எனவும், 'சையம்' எனவும் விலக்கினவும் வருமாலெனின், அவற்றுள் ஆரியச்சிதைவல்லன "கடிசொல்லில்லை" என்பதனாற் கொள்க," என்று கூறப்பட்டிருக்கின்றது. "கடிசொ ல்லில்லை காலத்துப் படினே" என்ற நூற்பாவுக்கு இளம்பூரணர், சேனவரையர், நச்சினார்க்கினியர் ஆகிய இவர்கள் கூறிய பொருள்களைக் காட்

டினும், அப் பொருள்களின் வேறாகத் தெய்வச்சிலையார் உரைத்த உரை முன் பின்னுள்ளவற்றோடு முரணாமல் இயைபுடையதாக இருத்தலும் உணர்தற்குரியது. "மிருச்சகடிகா" என்ற வடநூலில் சகடம் என்ற சொல் வந்துளது.

சக்கரம்: "அச்சுடைச் சாகாட்டாரம் வாங்குந் தந்தைக்கு" என்பது அகநானூறு. "சாகாட்டாரம்" என்பது வண்டியின் உருளை; அது, 'சாகாடு' 'சகடு' என்றாக இறுதிக் குற்றியலுகரத்தைக் கெடுத்து ஆரம் என்பதனைக் குறுக்கிக் ககர வொற்றிரட்டச் செய்து 'சக்கரம்' என்றாக்கினர்.

சந்தனம்: இச்சொல் 'சாந்தம்' என்ற சொல்லின்கண்ணுள்ள முதனிலையைக் குறுக்கி இறுதியிலுள்ள 'அம்' விகுதிக்கு இடையில் 'அன்' சாரியை சேர்த்துச் 'சந்தனம்' என்றாக்கப்பட்டது.

"விடர்முகை யடுக்கத்துச் சினைமுதிர் சாந்தம்" (புறம்-௨௭௪)
"சாந்த விறகி னவித்த புன்கம்"

என்றும்,

"புலர்ந்த சாந்திற் புலரா ஈகை" (பதிற்றுப்பத்து)

என்றும்,

"பலவுறு நறுஞ் சாந்தம்" (கலித்தொகை)

என்றும்,

"வடவர் தந்த வான்கேழ் வட்டம்
தென்புல மருங்கிற் சாந்தொடு துறப்ப" (நெடுநல்வாடை)

என்றும், பண்டு பெருவழக்கு உடையதாக நூல்களில் வழங்கப் பெற்றுவந்த "சாந்தம்" என்ற சொல்,

"வடமலைப் பிறந்த வான்கேழ் வட்டத்துத்
தென்மலைப் பிறந்த சந்தனம் மறுக"

என்று, சிலப்பதிகாரத்தில் வந்துளது. ஆகவே, இது சகரமுதன் மொழியாயுளது என நினைந்து வடசொல்லென்றோ வடசொல்லிலிருந்து வந்த தமிழ்ச் சொல்லென்றோ கூறுதல் தவறாகும்.

சந்தனாசலம்: சந்தனாசலம் என வரின், அது தமிழிலிருந்து படைக்கப்பட்ட சொல்லே என்க. அசைவு + இலம் என்ற இரண்டினையும் புணர்த்தி "அசலம்" "சைலம்" என்ற இரண்டு சொற்கள் படைத்துக்கொண்டனர்.

அசலம், சைலம், அசை + இலம்—சைலம். அசைவிலாதது என்பது பொருள். அசைவு + இலம்—அசை + இலம்—அசை + லம்—அசைலம்—அசலம்.

சத்துவகுணம்: "சாந்தம்" என்ற சொல் "சந்தனம்" என்று பொருள் தருதலேயன்றி அமைதியான பண்பு குறித்தும் வழங்கப்படும். சந்தனம்போன்ற தண்மையான இயல்பு என உவமையாகு பெயராய் வழங்கலாயிற்று. பாவை போல்வாளை பாவை என்பதுபோன்றது இச்சொல். "சாந்தம்" என்பதனைக் குறுக்கி "சந்தம்" என்றாக்கிப் பின்பு வன்மைப்படுத்திச் 'சத்துவகுணம்' என்றாக்கினர். குணம் என்பது குணிக்கப்படுவது, ஆராயப்படுவது என்ற பொருளுடைய தமிழ்ச் சொல்லேயாகும். ஆகவே, குணத்தையுடைய 'குணி' என்பதும் தமிழ்ச்சொல்லே என்க.

ரஜோகுணம், ராஜன், ராஜ்யம்: 'அரசன்' என்ற தமிழ்ச்சொல்லில் முதற்கண்ணுள்ள அகரத்தை அடுத்த ரகரத்தில் ஏற்றினர். ஏற்றவே "ராசன்" என்றாயிற்று. சகரத்தை 'ஜ' என ஆக்கி இறுதி னகரம் கெடுத்து, "ராஜ" என்று ஆக்கினர். அரசனது பண்பினைப்போன்று வீறுகொண்ட குணம் என்பதே "ரஜோகுணம்" என்பதன் பொருள். அரசன் என்பதிலிருந்து "ராஜா" என்ற சொல்லும், "அரசு" என்ற சொல்லிலிருந்து, "ராஜ்யம" என்ற சொல்லும் ஆக்கப்பட்டன. அரசன் என்பது தூய தமிழ்ச் சொல்லே என்க. "அருமையான—வியக்கத்தக்க தலைவன்" என்பது அதன் பொருள். "ஐ வியப்பாகும்" என்பது தொல்காப்பிய உரியியல் நூற்பா. ஐயன் என்பது வியக்கத்தக்கவன், தலைவன் என்று பொருள் தரும். அருமை என்ற சொல்லும் ஐயன் என்ற சொல்லும் மையீறும் உகரமும் கெடும்படி புணர்ந்து 'அரையன்' என்றாயிற்று. அதுவே பின்பு 'அரைசன்' 'அரசன்' எனவும ஆயிற்று.

"அகரத் திம்பர் யகரப் புள்ளியும்
ஐயெ னெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்" (தொல், எழுத்: ௫௬)

என்ற தொல்காப்பிய நூற்பாவின்படி 'ஐயன்' என்பதனை 'அய்யன்' என்றும் எழுதலாம். அய்யன் என்பதில் உள்ள யகரங்கள் சகரங்களாக மாறி 'அச்சன்' என்று ஆகிப் பின்பு சகரம் தகரமாக மாறி 'அத்தன்' என்றும் ஆயிற்று. இவ்வாறு போலியாக வருதல் இயல்பேயாகும். ஆகவே, அய்யன், ஐயன், அச்சன், அத்தன் என்ற இச்சொற்கள் நான்கும் தலைவன், வியக்கத்தக்கவன் என்ற பொருளுடையனவாய் ஒரே பகுதியிலிருந்து பிறந்த ஒரு பொருட் சொற்களேயாமென்க. அரசன் என்பது தலைவருள், வியக்கத்தக்கவருள் மிகவும் அரியனாக உயர்ந்தவனைக்

குறிப்பதற்கு வழங்கப்பட்டது. அருமை என்ற சொல்லும் ஐயன் என்ற சொல்லும் அரசன் என்ற சொல்லுக்கு முதற் சொற்களாய் அமைந்தன. ஆகவே, சீவகசிந்தாமணியின்கண் வருகின்ற "ராசமாபுரம்" என்ற சொல்லை வடசொல் என்பது தவறு. 'அரச' என்ற சொல்லிலுள்ள அகரமே ரகரத்திலேற்றப்பட்டு 'ராச' என்றாயிற்று என்பதும் தெளிவாகிறது. 'ரகரம்' தமிழில் மொழிக்கு முதலில் வராதல்லவா? ராச, ராஜ என்று வழங்கினால் யாவர்கண்டு பிடித்துவிடப் போகிறார்" என்ற நினைப்பினால் அவ்வாறு ஆக்கப்பட்டது என்க. அந்நினைப்பின் படி ஆக்கப்பட்டதே 'ரூபம்' என்ற சொல்லும்.

ரூபம்: 'உருவம்' என்ற தூய தமிழ்ச்சொல் பண்டு தொடங்கி இன்றுவரை வழங்கி வருவதை யாவரும் அறிவர். இதில், முதற்கண்ணுள்ள உகரம் அடுத்த ருகரத்தின்மேல் ஏற்றப பட்டது. வகரம் பகரமாகத் திரிக்கப்பட்டது. ஆகவே, 'ரூபம்' என்றாயிற்று.

உருவம்—உ+ருவம்—ரூவம்—ரூபம்.

முடிவு, முடிபு; உருவு, உருபு, வேற்றுமை உருபு, உருபு புணரியல் என்ற சொற்களில் வகரம் பகரமாக மாறுவது காண்க. வகரத்திற்குப் பகரம் போலிபோன்று வரும் முறைமைப்படி அச்சொல் மாற்றப்பட்டதென்க.

ரூபகாலங்காரம்: அழகு என்ற தமிழ்ச் சொல்லிலுள்ள ழகரத்தை லகரமாக்கிக் ககரத்திற்கு இனமாகிய ஙகரவொற்றும் இடைப்பெய்து ஆர் என்பதனைப் பின்சேர்த்து வழக்கம்போல் அம் என்பதனை இறுதியிற் சேர்த்து "அலங்காரம்" என்றாக்கினர்.

அழகு—அலகு—அலங்கு—ஆர்—அம்—அலங்காரம்.

உருவகா வகுக்கப்படுவது உருவகம்; ஆகவே, ரூபகாலங்காரம் என்பது உரு+வகு+அழகு என்ற சொற்களிலிருந்து பிறந்தது.

தமோகுணம்: தாழ்மதிக்குணம் என்ற தமிழ்ச்சொல் தாமதகுணம் என்றாகித் தமோகுணம் என்றாயிற்று. தாழ்ந்த மதியுடையதாக்கக்கூடிய குணம் என்பது பொருள். அமைதி, விரைவு, ஒய்வுப் பண்புகள் என்றும்; சாந்தம், வேகம், தாழ்மதி அல்லது தளர்மைப் பண்புகள் என்றும் தமிழில் வழங்குவது ஏற்புடைத்து.

தீபகாலங்காரம்: தீவம் என்ற சொல் தீ என்ற பகுதியிலிருந்து பிறந்த தமிழ்ச்சொல்; தீயிலிருந்து அழகாக விளக்கிற்

பொருத்தி வைக்கப்பட்டது தீவம். முன்போல் வகரத்தைப் பகரமாக்கி அழகு என்பதிலிருந்து அலங்காரம் என்பது உண்டாக்கி "தீபகாலங்காரம்" என்றனர்.

சிலேஷாலங்காரம்: சில பொருள்கள் எடுத்துக்கொள்ளும்படி பாடப்படுவது சிலேடை. 'சில' என்னுஞ் சொல்லுடன் 'எடை' என்பது சேர்த்து அகரங் கெடுத்து எகரத்தை நீட்டிச் சிலேடை என்றாக்கினர் பின்பு, டகரத்தை ஷகரமாக மாற்றிச் "சிலேஷா" என்றாக்கினர். சில—எடை—சில்—எடை—சில்—ஏடை—சிலேடை—சிலேஷா.

பரிவருத்தனை: பரி என்பது செலவு என்ற பொருள் தரும். "காலே பரிதப் பினவே" என்ற குறுந்தொகைப் பாடலில் செலவாகிய நடை என்ற பொருள் தருவது காண்க. செல்லுதலிற் சிறப்புடைய குதிரைக்கும் பெயராயிற்று. "ஆதி போகிய பாய்பரி நன்மா" என்பது அகநானூறு. வருத்தனை என்பது கொள்வனை, கொடுப்பனை என்பன போன்ற சொல். அது "வரு" என்ற பகுதியினடியாகப் பிறந்தது. வருத்தனை என்பது தன்னிடத்து வரச்செய்யும் பொருள் என்று பொருள் தரும். "ஒரு பொருளைச் செல்லவைத்து ஒரு பொருளை வரவழைப்பது" என்பதே "பரிவருத்தனை" என்ற சொல்லுக்குப் பொருளாகும். ஒன்றைக் கொடுத்து மற்றொன்றை வாங்குவது என்பது தான் தெளிவான பொருள். பரிமாற்றம் என்ற சொல்லும் இப் பொருள்பட வழங்கத்தக்கது. "பரிமாறுதல்" என்ற சொல் "சென்று தன்னிடத்திலுள்ள பொருளை வேறு ஒருவருக்கு மாற்றிப் படைத்தல்" என்ற பொருளில் வழங்குவதுங் காணலாம். ஆகவே "பரிவருத்தனாலங்காரம்" என்ற சொல் தமிழ்ச் சொல்லிலிருந்தே படைக்கப்பட்டது என்க.

ரவி: இரவினை அவிப்பது இரவி. இரவு + அவி—இரவி—ரவி. இருள் என்றும் இரவு என்றும் வழங்குஞ் சொற்களை நாம் நன்கு அறிவோம். இரவு என்பது "இரா" என்றும் வழங்கும். "இரா" என்பதில் இகரத்தைக் கெடுத்து "ராத்திரி" என்று ஆக்கினர். "பாஞ்சராத்திரமதம்" என்பதில், "ராத்திரி" என்ற சொல் வருதல் காண்க. "ரா" என்பது இருள். இருளை அவிப்பது—அடக்குவது என்ற பொருளில் "ரவி" என்ற சொல் படைக்கப்பட்டது. ஆகவே, இரவு என்பதும் அவி என்பதுஞ் சேர்ந்து "இரவி" 'ரவி' என்று ஆகியது என்பது தெள்ளத்தெளிய விளங்குதல் காண்க. வடமொழியாளர் தமிழிலிருந்த

படைத்த சொற்களுக்கெல்லாம் வேறு பகுதிப்பொருள் கூறி ஏமாற்றமான நூல் செய்துவைத்துள்ளனர். தமிழ் நாட்டுக் கோயிற் பெயர்களை மாற்றினர்.

சிதம்பரம்: "சிற்றம்பலம்" என்றசொல்லைச் "சிதம்பரம்" என்று மாற்றினர். வல்லின றகரம் தம் மொழியில் இல்லாமையால் றகரத்தைத் தகரமாக்கி லகரத்தை ரகரமாக்கினர். சித்+அம்பரம். சிதாகாசவெளி என்று பித்தலாட்டமான பொருளுங் கூறினர். தேவாரம் பாடிய மூவர் காலத்தில் வழங்காத "சிதம்பரம்" என்ற சொல், அவர்கள் காலத்திற்குப் பின்பு வந்தது. தமிழரின் கோயில்கட்குப் புராணநூல் எழுதத் தொடங்கிய வடமொழியாளரின் பித்தலாட்டமான மாற்றம் இது. மறைக்காடு வேதாரணியமாயிற்று. மயிலாடுந்துறை மாயவரமாயிற்று; ஐயாறு பஞ்சநதீச்சுரமாயிற்று. இவ்வாறு கோயிலுள்ள ஊர்ப் பெயர்கள் எல்லாவற்றையும் மாற்றி, ஆங்குள்ள தெய்வங்களுக்குத் தமிழர் வைததிருந்த தமிழ்ப் பெயர்கள் எல்லாவற்றையும் மாற்றிப் பின்பு, அப்பெயர்களை யெல்லாம் வடமொழியிலிருந்து வந்தன என்று கூசாமல் நாணுமல் கூறவுந் தொடங்கினர், தமிழரின் இசைப்பெயர்களைத் திரித்துமாற்றினர். நூற்பொருள்களைக் கவர்ந்து எழுதி வைத்துககொண்டனர். தென்றமிழ் நாட்டிலுள்ள குற்றாலத்தையும் அதனைச் சார்ந்த நாட்டினையும், "தென்னாரிய நாடு" என்று வடமொழிப் புராணத்திற் பாடி வைத்தனர். அதனை மொழிபெயர்த்த கவிராயரவர்களும் குறவஞ்சியிலும் புராணத்திலும ஆரியநாடு என்றே பல இடங்களில் பாடியிருப்பதை யாவரும் நோக்கலாம். இவ்வாறு துறைதொறுந் துறைதொறும் புகுந்து தமிழைச் சிதைத்துத் தெலுங்காகவுங் கன்னடமாகவும் மலையாளமாகவும், குடகு, துளு, கூர்க்கு, முதலியபல மொழிகளாகவும் ஆக்கினர்.

இம் முயற்சிகள் எல்லாவற்றாலும் கெட்டொழிந்தனபோக எஞ்சியிருக்குந் தமிழை அழிக்கக் "கிரந்தம்" என்ற ஒரு மொழியைத் தமிழிலிருந்து ஆக்கினர். தமிழ் நாட்டின் ஒரு பகுதியான மலையாள நாட்டில் வழங்கிய தமிழைச் சிதைத்து "மலையாளம்" என்றாக்கியதுபோல, தமிழ்நாட்டில் வழங்கும் தமிழைக் கிரந்தமாக்க முயன்றனர்; முடியவில்லை. "மணிபபிரவாளம்" ஆக்கிப் பார்த்தனர்; அதிலுந் தோல்வியே ஏற்பட்டது. இன்று கலைச் சொல்லாக்கக் குழாததுட் புகுந்திருந்து கொண்டு தமிழ்ச்சொற்களுள் வடசொல் எனப்படும் புத்துருவான சொற்களைப் புகுத்

துத் தமிழை உருக்குலைக்கும் வேலை செய்கின்றனர். ஒவ்வொரு அரசியற் கிளர்ச்சிக் காலத்திலும் தமிழைச் சிதைத்திருக்கின்றனர். இச்செயல்களை யெல்லாம ஆற அமர இருந்து நினைந்து உணரவல்லாருக்கு வடமொழியாளர் தமிழிலிருந்து பெரும்பான்மையான சொற்களை எடுத்து உருமாற்றி யமைத்துக் கொண்டனரென்பதும், அவற்றிற்கு அடிப்படையான தமிழ்ச் சொற்களிற் சிலவற்றை வடமொழியிலிருந்து தமிழிற்கு வந்தன என்றுங் கூறி ஏமாற்றி வந்தனர் என்பதும், அவற்றிற்குப் பகுதிப் பொருள்கள் பொய்யாகக் கற்பனை செய்தனர் என்பதும், வேண்டுமென்றே (வஞ்சகமாக) எண்ணிறந்த தமிழ் ஏடுகளைப் பதினெட்டாம்படிப் பெருக்கில் ஆற்றுத் தண்ணீரில் விடும்படியான மூடப்பழக்கம் உண்டாக்கிக் கெடுத்தனர் என்பதும், ஒளிநூலாகிய சோதிட நூலைப் பயின்று மக்களை ஏமாற்றி வடமொழிப் பெயர்களையே எல்லோரும் வைத்துக் கொள்ளும் படி செய்தும், மணவீடு, பிணவீடு, சடுகாடு, உணுவிடுதி, கோயில், குளம், அரசியல்மன்றம், அறங்கூறவையம், முதலிய எல்லா இடங்களிலும் புகுந்து தமிழை அழித்துக் கெடுத்துத் தமிழ்ச் சொல்லை உருமாற்றிப், படைத்த சமஸ்கிருதத்தை வழங்கச் செய்தனர் என்பதுவும் தெற்றென விளங்கும். வடமொழியைப் படித்தால் தமிழர் இந்த நுட்பங்களை அறிந்து கொள்வாரென்று கருதிப் பண்டு அதனைத் தமிழர் பயிலவுங் கேட்கவுங் கூடாதென்றும், கேட்டால் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்ற வேண்டுமென்றும், தொட்டால் வெட்ட வேண்டுமென்றும் ஏற்பாடு செய்து அவர்களின் சூழ்ச்சியை அறியா வகையாக நன்முக ஏமாற்றிவந்தனர். இன்னும் இந்தத் துன்பம் ஒய்ந்தபாடில்லை. "சிந்துபூந்துறை" என்ற அருமைத் தமிழ்ச் சொல்லை "சித்புட்பக்கட்டா" என்ற வட சொல்லிலிருந்து வந்தது என்று சிறிதும் நாணமின்றிப் பிதற்றுகின்ற நிலை இன்னும் இருந்து வருகிறது. இவற்றிற்கெல்லாந் தெளிவடையாதவர்கட்கு ஒன்று கூறுவேன், நன்கு நோக்குக.

தமிழில் பாட்டியல் என்ற இலக்கணநூல் எழுதத் தொடங்கிச் செய்திருக்கும அட்டூழியத்தைப் படித்து நினைத்துப் பாருங்கள். தமிழ் எழுத்துக்களை நான்கு சாதியாகப் பிரித்தனர். உயிரெழுத்துக்களும் முதல் ஆறு மெய்யெழுத்துக்களும் பிராமணருக்காம்; ஏனையவற்றுள் த, ந, ப, ம, ய, ர என்ற ஆறு மெய்யெழுத்துக்களையும் ல, வ, ற, ன என்ற நான்கு மெய்யெழுத்துக்களையும் அரசருக்கும் வணிகருக்கும் ஐயோ போகட்டும் என்று விட்டுக் கொடுத்திருக்கின்றனர். ழ, ள என்ற-மொழிக்கு முதலில் வராத-இந்த இரண்டு எழுத்துக்களை

யும் வேளாளருக்கென்று உவந்து கொடுத்திருக்கிறார்களாம் இம்முறையில் வருணப் பொருத்தமுடன் பாடவேண்டுமாம். இவற்றை வைத்துக்கொண்டு அவன் என்ன செய்ய? ழள ழள ளழ ளழ என்று உளறவா? எழுத்துக்களில் மட்டுமல்ல இந்தத் துன்பம். வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்ற நால்வகைப் பாவினுள் அமிழ்தொழுகும் இனிய வெண்பா—திருக்குறள் அமைந்த—முத்தொள்ளாயிரம் அமைந்த வெண்பா பிராமண சாதியாம். அவர்களைப்பற்றி மட்டும் வெண்பாவினால் பாடவேண்டுமாம். அரசருக்கு ஆசிரியப்பாவாம்; வணிகருக்குக் கலிப்பாவாம்; வேளாளருக்கு வஞ்சிப்பாவாம்.

"மறையோர் மன்னர் வணிகர் சூத்திரர்க்கு
முறையான் வெண்பா முதனான் செய்தும்"

என்பது இலக்கண விளக்கப்பாட்டியல். என்னே இவர்கள் தம் வஞ்சிப்பு. சிறு வழக்கினதாக அருகிவரும் வஞ்சிப்பா மட்டும் வேளாளருக்காம். இந்த மூட வழக்கம் தொல்காப்பிய நூலில் எழுதப்படவில்லை. யாப்பருங் கலக்காரிகையின் உரையில் பிற்காலத்தில் புகுத்தப்பட்டது. பாட்டியல்களில் தம் கைவரிசைகளைக் காட்டிக் கொண்டிருக்கின்றன. இத்தகைய இழிநிலையான பாட்டியலும் பல்கலைக் கழகத்தாரால் தேர்வுக்குப் பாடமாக வைக்கப்பட்டிருக்கிறது. பிள்ளைத் தமிழைப் பற்றிப் பாட்டியல் கூறுவதையும் நோக்குங்கள். தேவர்கட்கு நூறு பாடவேண்டுமாம் பிராமணருக்குத் தொண்ணூற்றைந்து பாடவேண்டுமாம். அரசருக்கும், அமைச்சருக்கும், வணிகருக்கும் அவற்றிலிருந்து குறைவாக இயற்ற வேண்டுமாம். வேளாளருக்கு முப்பது பாட்டிற்குமேற் பாடக் கூடாதாம். என்னே இவர்களின் நோக்கம். இலக்கண நூலுட் புகுந்து எழுத்துக்கும் பாட்டிற்கும் சாதி வகுத்தனர் எனின், அந்தோ இவர்கள் உள்ளம் எத்தகையது என்று கூறுவது? சிலப்பதிகாரத்தில் நாலுவகை வருண பூதங்கள் கற்பித்து ஏட்டுச் சுவடியிற் செருகிவிட்டிருக்கின்றனர். திரு உ. வே. சாமிநாத ஐயரவர்கள் அவ்வாறு இடைச் செருகலாகச் செருகப்பட்ட பகுதியை இருபகரக் குறிக்குள் அமைத்து, இவை எல்லா ஏடுகளிலும் இல்லை; இடைச் செருகலாக இருக்கலாம் என்ற கருத்திற் குறிப்பிட்டிருப்பதையும் நோக்குங்கள். ஆகவே, இனியாவது தமிழுக்குத் தீங்கு செய்வதை விடுத்துத் திருந்தும்படி அன்னாரை வேண்டுகின்றோம்.

பேரறிஞர் பழநியப்ப பிள்ளை

(29-8-1893—1-2-1951)

[இ. ஆறுமுகம் எம்.ஏ., தமிழ் விரிவுரையாளர், திருவேங்கடவன் கீழ்க்கலைக் கல்லூரி, திருப்பதி.]

கண்ணொளி குறைந்தவனுக்குக் கண்ணொளியைத் தந்த மருத்துவனைப் போலவும், நடுக்கடலில் கரை காணாது திகைத்த மாலுமிக்குக் கரையினைக் காட்டி மகிழ்ச்சி ஊட்டிய கலங்கரை விளக்கம் போலவும், வறுமையிலே வாடிய ஒருவன் தேடாமல் கண்டெடுத்த புதையலைப் போலவும் தமிழர் வரலாறு ஆராய்ச்சி யரங்கிலே புகுந்து, விளக்கத்தைத் தூண்டி, இருளை விலக்கினார். இருள் மெல்ல மெல்ல மறையத் தொடங்கும்போது, கரையினை நெருங்கி வரும் மரக்கலம் வெடிகுண்டுகளால் சாய்ந்தபோதும், கண்ணொளியைப் பெற்றும் கண்ணொளி குறைந்தவன் நீண்ட நாள் வாழாமல் மறைந்தபோதும், புதையல் கண்டெடுத்தும் ஏழை துய்ப்பதற்குக் கொடுத்து வைக்காமல் மறைந்தபோதும் அவரவர் மனதில் ஏற்படும் துயர அலைகளைப்போலத் திருப்பதி யில் அவர்தம் இல்லத்தில் 1-2-1951-மாலை 5-10-மணிக்கு அறிஞர் திரு. தி. பொ. பழநியப்ப பிள்ளை அவர்கள் மறைந்த போது பெருந் துன்ப ஒலி தோன்றியது.

இவ்வாறு தமிழ்மக்களின் உள்ளத்தில் துன்பத்தைத் தந்து மறைந்த பெரியார் 1893-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 29-ஆம் நாள் பழநியில் ரெவினியூ இலாக்காவில் கணக்கராக ஊழியம் செய்துவந்த உயர்திரு. தி மா. பொன்னுசாமிப்பிள்ளை அவர் களுக்கும், திருமதியார். அரங்கம்மாள் அவர்களுக்கும் மகனா ராகத் தோன்றினார். "விளையும்பயிர் முளையிலே தெரியும்," என்பதுபோல அவர்தம கூர்த்த அறிவும், கல்விகற்கும் ஆவ லும் அவருடன் ஒன்று சேர்ந்து, வளர்ந்துவந்தன. திண்டுக் கல்லில் அவர்தம் தாய்வழிப் பாட்டனார் உயர்திரு. ஆறுமுகம் பிள்ளையவர்களிடம் தமிழறிவும், கொன்னக்கோல் மருதநாயகம் பிள்ளையென்று புகழுடைந்த அவர்தம் பாட்டனாரிடம் இசைக் கலையறிவும் பெறத் தொடங்கினார். திண்டுக்கல் முனிசிபல் உயர்நிலைப் பள்ளியில் மூன்றும் படிவம் வரை பயின்றார். 1911-ஆம் ஆண்டு தொடங்கி 1915-ஆம் ஆண்டு முடியத் தமது மூதாதையர் வாழும் ஊராகிய திரிசிராப்பள்ளி நேஷனல் உயர்நிலைப்பள்ளியில் பள்ளியிறுதி வகுப்புவரை பயின்றார். 1915-ஆம் ஆண்டு தமிழில் உள்ள தமது சிறந்த

பயிற்சியை வெளிக்காட்ட மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் பொற் பதக்கத்தையும், பாளையங்கோட்டைச் சைவசித்தாந்தசபையில் வெள்ளிப்பதக்கத்தையும் பெற்றார்.

1916-ஆம் ஆண்டு முதற்கொண்டு அதே உயர்நிலைப்பள்ளி யில் தமிழாசிரியராக வேலையில் அமர்ந்தார். எஸ். பி. ஜி. கல் லூரியில் ஊழியம் செய்துவந்த பிச்சை இப்ராஹிம் புலவரிடம் கூடிய மட்டில் தமிழ்க்கல்வி பெற்றுவந்தார் எனினும், தமிழ் மொழிக் கல்வி முழுதும் அவர்தம் சொந்த முயற்சியின்மூலம் உருப்பெற்று வந்தது. தமிழ்க்கல்வியில் உள்ள ஆர்வம் மிகுதி யானதால் அவரில்லம் தமிழ்ப்புலவர்கள் நடமாடும் கோயிலாக விளங்கியது. அத் தமிழ்ப்புலவர்களில் ஒருவராகிய ஆண்டி பட்டி சமஸ்தான வித்துவான், திருவாளர். திருஞானசம்பந்தக் கவிராயர் அவர்கள், "திரிசிரபுரம் வித்துவான் தி. பொ. பழநி யப்பபிள்ளை அவர்கள் தமிழிலக்கண இலக்கியங்களில் நல்ல தேர்வும், கற்ற நூற்பொருளைப் பிறர்க்கெடுத்துச் செவ்வில் போதிக்கும் திறமும், சொற்பொருள் அலங்காரங்கள் அமையக் கவிபாடும் வன்மையும், பிரசங்கநலமும் உடையவர்கள்," என்ற நற்சான்றிதழை இவருக்கு அளித்தனர்.

1-6-1917-இல் திருப்பதிக்கு அண்மையிலுள்ள சிறுத்தா னூர் பாங்கராக (Banker) இருந்தவர் இவருக்கு மாமனாராகும் பேறு பெற்றார். அவர்தம் திருமகள் திருவாட்டி. இராஜ மன்னாரம்மாள் அவர்களை மணந்தார். சோதிடர் ஒருவர், "இவர் முருகனைப்போன்று இரு வாழ்க்கைத்துணைவியரைப் பெறுவர்," என்ற கூற்றைத் தம் வாழ்க்கைத் தூய்மையால் பொய்ப்பித் தார். அவர்தம் மனைவியார் இவரிடம் காதல் கெழுமியவராகி, இவர் நலமே தம் நலம் என்று வாழ்நாள் முழுதும் வாழ்ந்து வந்திருக்கின்றனர். அன்னார் வாயிலாக, இவர் இரண்டு ஆண் குழந்தைகளுக்கும், மூன்று பெண் குழந்தைகளுக்கும் தந்தையா ராயினர். உலகமக்களிடத்தில் அன்புணர்ச்சி காட்டியது போலவே, அவர் குடும்பத்திலும் அன்புநலங்கனிந்த தந்தையா ராகவே வாழ்ந்து வந்தார் என்பதை அவர் மறைவைத் தாங்க முடியாது எழுந்த அரற்றொலி தெளிவாக்கியது. எனினும், அவருள்ளம் துறவையே நாடி நின்றது.

இவர் உள்ளத்திலே ஆடும் தெய்வம் நடமாடியவாறிருந்த போதும், இவர் காலத்துக்கேற்பப் பலதிறப்பட்ட சமய நூல்க ளையும் கற்றார். சைவசித்தாந்தம், வைணவம், வேதாந்தம் என்ற சமயக்கொள்கைகளைத் தம் சொந்த முயற்சியால் கற்று அறிந்து கொண்டார் அமெரிக்கப்பிரசாரக் குழுவைச்

சேர்ந்த எச். டபிள்யூ. கார்ட்டர் என்பவர்மூலம், கிறித்துவ சமயக் கொள்கைகளை அறிந்தார். சமரசமே சமயக்கொள்கைகளில் சிறந்ததாகக் கொண்டார்.

இக்காலத் தமிழாசிரியர்களைப்போல, 1930-இல் வித்துவான் தொடக்க வகுப்பிலும் (Preliminary), 1932-இல் வித்துவான் இறுதிநிலைத் தேர்விலும் தேர்ச்சியடைந்தார். தமது தேர்ச்சியின் அறிகுறியாக முதன்முதலாகத் திருப்பனந்தாள் மடாலயத்தின் ஆயிரம்ரூபாப் பரிசையும் பெற்றார்.

ஆங்கிலத்தில் தமது புலமை காட்டுவதற்கு 1937-ஆம் ஆண்டு பி. ஓ எல் (B. O L.) வகுப்பில் தென்னிந்திய மொழிகளும், இலக்கியமும் (South Indian Languages and Literature) என்ற தேர்வுப் பகுதியிலும், 1938-ஆம் ஆண்டு திராவிட மொழிநூல் (Dravidian Philology) என்ற தேர்வுப் பகுதியிலும தேர்ந்து, பி. ஓ எல் பட்டமும பெற்றார்.

இவர் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்திலே தமிழ் ஆசிரியராக 1932-முதல் 1941-வரை ஊழியம் செய்துவந்தார். நாவலர் சோமசுந்தரபாரதியார், பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார், இரா. இராகவையங்கார், வேங்கடாசிநாட்டார், சர்க்கரை-இராமசாமிப்புலவர் என்று இத்தகைய குறிப்பிடத் தகுந்த தமிழ்மணிகளுடன் இத் தமிழ்மணியும் ஒன்று சேர்நது ஒளி வீசத் தொடங்கியது. சோமசுந்தரபாரதியார் இவர் தம் நெருங்கிய நண்பராவர். அவர் இவர் பிரிவை நினைத்து மிகவும் வாடிவிட்டார் என்று அவர் முடங்கல் புகல்கிறது.

இவர் சித்திரக்கவிக்கு மித்திர ராகவும், சித்திரக்கவி நிபுணராகவும விளங்கினர். இவர் சித்திரக்கவியாகிய கலையில் தேர்ந்ததை டாக்டர் உ. வே. சாமிநாதையர், “நீங்கள் எழுதிய பந்தச் செய்யுட்களையும் அவற்றின்பொருளையும் பார்த்தேன். சித்திரக்கவிகள் இக்காலத்து அருமையே. இந்த விஷயத்தில் உங்களுக்குப் பயிற்சியிருத்தலைத் தெரிந்து சந்தோஷிக்கிறேன்,” என்று, 8—9—1932-இல் புகழுரையாகப் பாராட்டிப் பேசினர்.

1932-முதல் 1934-வரை இவர் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் இளந்தமிழ்ப் புலவராகவும் (Junior Tamil Pandit), 1934-முதல் 1936-வரை முதுதமிழ்ப் புலவராகவும் (Senior Tamil Pandit), 1936-முதல் இளம் ஆராய்ச்சிப்புலவராகவும் (Junior Research Pandit) திகழ்ந்தார்.

திருவேங்கடவன் கீழ்க்கலை ஆராய்ச்சித்துறைத் தமிழ்த் தலைவராக 31-7-1941-முதல் ஊழியத்தில் அமர்ந்தார். அது

முதற்கொண்டு பதிப்பாளராகவும், ஆராய்ச்சி அறிஞராகவும் தமிழன்னைக்கு அவர்செய்த தொண்டுகள் அளவிடற்கரியன. திருவேங்கடத் தலபுராணம், எம்பெருமானார் நெஞ்சுவிடு தூது, சேடமலைப் பதிற்றுப்பத்தந்தாதி, திருக்குறள் காளிங்கர், பரிப் பெருமாள் உரை, இவர் பதிப்பாளராகவே யிருந்து வெளியிட்டவை. "என்கடன் பணிசெய்து கிடப்பதே," என்ற தொண்டருண்மையைப் பின்பற்றி, "ஆராய்ச்சி ஆராய்ச்சிக்காகவே," என்ற வரலாற்றாசிரியரின் வழியில் நடந்து, தமிழ்வரலாற்றில் புதிய உண்மைகளை அகழ்ந்தெடுத்துக், கல்வெட்டு அறிஞர் என்று அறிந்த திருப்பதி கீழ்க்கலைக்கல்லூரி மாணவர்கள் அவர்தம் கல்வெட் டறிவால் புதிய உண்மைகளை அறிந்து பெற்ற இன்பமே, இன்று அவர் பிரிவைத் துன்பமாகக் கருதும் அளவுக்குக் கொணர்ந்தது.

எடுத்த நூற்பொருளைச் செவ்விதாக விளக்குவதில் மட்டுமல்ல, தாம் கண்ட உண்மையை எடுத்துரைப்பதில் அஞ்சாத நெஞ்சம் படைத்தவர். ஆராய்ச்சியுலகில் அறிஞர்களை அஞ்சாது எதிர்த்துநின்ற மறைமலையடிகளாரின் மாணிக்கவாசகர் காலஆராய்ச்சியை அஞ்சாது மறுத்து 'மாணிக்கவாசகர் இவருக்குப் பிற்பட்டவர்,' என்று கூறிய முறையும், திருவேங்கடவனைச் சிவனாகப் பாராட்டியவரில்லை என்பதை மறுத்து இராகவையங்காருக்கு அவர் அளித்த கொட்டுரையும், திருவள்ளுவரைக் காலததால் பிநதியவராகத திரு. வையாபுரிபபிள்ளை அவர்களின் கருததை மறுதத முறையும இன்று தமிழன்னைக்குப் புதிதாக இடப்பட்ட மலர்களாகும். ஆராய்ச்சியுலகிலே மயக்கந் தருவன மூன்று கால ஆராய்சசிகள். அவை: மணிவாசகரின் காலம், சிலம்பின் காலம், வள்ளுவர் காலம் ஆகும். அவை இவரால் அறுதியிடப்பட்டமையால், மயக்கம் ஒழிய மருந்தைததநத பெருமை இவரைச் சேரும.

சிறு வயதிலேயே இவருக்கு இசையிலே நாட்டம் அமைந்திருந்தது. அவ்விசைப் பயிற்சி பிறகு கலையனுபவிக்கும் திறனில் வெளிவந்தது. திருப்பதியிலே ஆணடு தவறாது நிகழும் தியாகராசர் திருவிழாவில் பொருந்தும இசைவிழாக்களில் கலந்துகொள்ளும் இசையறிஞர்களைப் பாராட்ட அவர் தாளம போடும்போதும், "சபாஷ்" என்று சொல்லும் போதும் இசையறிஞர்கள காணமுடியாத ஊக்கம பெறுவார்கள்.

இவர் சொல்நயமும், பொருள்நயமும, கலைநயமும் படப் பேசுவார். இவர் பேசும்போது முததமிழும் முழங்கும. இவர் இளமை துள்ளி வந்து நிற்கும்.

இவ்வாறு வாழ்ந்த பெரியார், தம் நண்பர் சோமசுந்தரபாரதியாரைப் போன்றவர்கள் உளம் குலையவும், மாணவர்களும், உடன் பயில் ஆசிரியர்களும் மனம் நடுங்கவும், அன்பர்களாய் நெருங்கி வாழ்ந்தவர்கள், “ஆறுதல் இனி எங்கே?” என்று எண்ணி ஏங்கவும், “நம் உடலைப் பிணிக்காது எந்நோயும்” என்று இறுமாந்திருந்த அவர் தம் சட்டடலை, மூப்பினால் பற்றிய ஊர் பேர் அறியா ஒரு நோய் அவர் பொன்னுயிரைக் கூற்றுவனுக்கு விருந்தாக அளித்தது. தமிழ்ப்பலமையிரத்தத்தின் சுவையை உண்டு மகிழ்ந்த கூற்றுவ மறைமலையடிகளின் மறைவு குறித்து மனம் மாழ்கிய பெரியாரின் பொன்னுயிரையும் கௌவிவிடக் கங்கணம் கட்டியது. அறிவாளர்களை அழித்துவிட்டால் இனி இப் பேதையர்களின் உயிர்களைத் தான் எளிதில்பெற முடியாது என்று இக்காலப் போராட்டமுறை பயிலாக் கூற்றம், இக்கால அறிவாளர்களை அழிக்கத் தொடங்கியதுபோலும்! அஞ்சா நெஞ்சத்தின் அறிகுறியாக விளங்கிய அறிஞர் பெர்னட்ஷாவைப்போலவும், மறைமலையடிகளைப் போலவும், இவரும் கூற்றுவற்கு விருந்தாயினர்.

இவர் மறைவைத் தாங்க வொண்ணாது திருப்பதி கீழ்க்கலை ஆராய்ச்சிக் கூடமும், திருப்பதி கீழ்க்கலைக் கல்லூரியும், அண்ணாமலைப் பல்கலைக்கழகமும் கதவுகளை சாத்திக்கொண்டன.

அவரைப் பிரிந்து வாடுகின்ற குடும்பம் தலைவனைப்பிரிந்து ஆற்றொணாத் துன்பத்தில் ஆழ்கிய நங்கையை ஒத்து நிற்கின்றது. அன்பில் வளர்ந்து, ஆராய்ச்சியில் அச்சம் நீக்கி வாழ்ந்த ஒரு பெரியார், ஆராய்ச்சியுலகில் சினநெருப்பை வளர்த்துச் சினமாகிய நெருப்பால்தான் மாற்றலர்களைச்சினமெழ நோக்கினர். ஆனால்அவர் ஆராய்ச்சி யுலகிலே யிருந்து வாழ்க்கையுலகிலே நடமாடும்போது, குழந்தையினும் கள்ளங்கபடமற்றவராய் விளங்கினார். மக்களை நடமாடும் தெய்வங்களாகக் கொண்டாடினர். என்போன்ற வயதில் சிறியோரையும், “சாமீ, நமஸ்காரம்” என்று கைகூப்பித், தலைவணங்கும்போது, சொல்லொணாத மகிழ்ச்சியில் மனம் துள்ளும். அவர் வயது முதிர்ந்தவராயினும், உள்ளத்தில் இளைஞர்.

இத்தகைய அன்புடைய அறிஞர்களைத் தமிழ்நாடு இன்னும் நன்றாக அறிந்து போற்றுவதற் கில்லை. இனியாவது, ஆங்கில நாட்டு மக்களைப் போலவும், ஆங்கிலநாட்டு அரசாங்கத்தைப் போலவும் தமிழ்மக்களும், தமிழ்நாட்டு அரசாங்கமும் அறிஞர்கள் இருக்குமிடம் தெரிந்து, ஓடி, அவர்களை அணைக்கவேண்டுமென்பது என் பணிவான வேண்டுகோள்.

திருக்களிற்றுப்படியார் ஆசிரியர்

[தி. பொ. பழனியப்ப பிள்ளை B.O L.]

(ஆசிரியர் தாம் உலகில் வாழ்ந்தபோது அனுப்பியது. சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரை)

தமிழ்மொழியில் வழங்குகின்ற சைவசித்தாந்த நூல்களாகிய பதினான்கும் ஏறத்தாழ எழுபது யாண்டுகட்கு முன்பு முதன்முதலாக அச்சேறின. பின்னரும சில பேரறிஞர்கள் அச்சிட்டனர். 1934-ம் ஆண்டில் சென்னைச் சைவசித்தாந்த மகாசமாசத்தார், காலஞ்சென்ற S அனவரதவிநாயகம் பிள்ளையவர்கள் எம். ஏ., எல். டி., இராவ்சாஹிப் திரு. S.வையாபுரிப் பிள்ளையவர்கள் பி.ஏ., பி.எல்., ஆகிய இரு பேரறிஞர்களையும் கொண்டு இப் பதினான்கு சாத்திரங்களின் மூலமும் உரையும் ஆராய்ச்சி செய்வித்துச் சமாசத்தின் முதற்பதிப்பு வெளியிட்டார்கள். பின்னர் 1940-ஆம் ஆண்டில் சமாசத்தின் இரண்டாம் பதிப்பு அறிஞர் திரு. மு. அருணசலம் எம்.ஏ., அவர்கள் ஆராய்ச்சிப் பயனாய் வெளிப்போந்தது.

இவற்றுள் இறுதியிற் கூறிய சமாச இரண்டாம்பதிப்பி லொழிய முன்னைய பதிப்புக்களிலெல்லாம் இப் பதினான்கு சாத்திரங்களின் வைப்புமுறை,

> " உந்தி களிறு உயர்போதஞ் சித்தியார்
> பிந்திருபா வுண்மை பிரகாசம்—வந்தவருட்
> பண்புவினா போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு
> உண்மைநெறி சஙகற்ப முற்று "

என்ற பழம்பாடலிற் கண்ட வைப்புமுறையாகவே அமைந்துள்ளது. இந்நூல்கள் தோன்றிய காலவரன்முறைகளை நோக்கியே இப் பழம்பாடல் இவற்றினடைவைக் காட்டியுள்ளது என்பது அறியப்படுகின்றது. இக்காலத்து நூலாராய்ச்சியாளர்கள் கண்ட காலவ்ரன்முறையும் மாறுபாடின்றி இப் பாடற் கொப்பவே யுள்ளதென நன்கு அறியலாம்.

இவை யாவும் தமிழ்நாட்டிற் றோன்றிய சைவத் திருவருளாளர்களாலே அருளிச்செய்யப்பட்டன வென்பதும், தமிழ் மொழிக்கே யுரியனவென்பதும், அப் பெரியார்களின் திருப்பெயர்களாலும், அவர்கள் வாழ்ந்த நாடு, ஊர்களின் பெயர்களாலும், வாழ்வு வரலாறுகளாலும், அவர்களருளிய நூற்பெயர்களாலும் தெளிவாக விளங்குகின்றன. சுவாமிநாததேசிகர் இயற்றிய சந்தானசாரியர்புராண நூலும், முருகதாச சுவாமிகளியற்றிய புலவர்புராண நூலும் கூறுகிற செய்திகளும் மேற்கண்ட முடிபுகளை வலியுறுத்துகின்றன.

பழைய பதிப்புக்களும் சமாச முதற்பதிப்பும் திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் இவற்றின் ஆசிரியர்களைப் பற்றிய வரலாறுகளைக் கூறுதற்கண், வடநாட்டினின்று சேதுக்கரைத் திருமுழுக்கின்பொருட்டுத் தெற்குப்போந்த ஒரு பெரியார் அதனை முடித்துத் தந்நாட்டுக்கு மீளுங்கால் சோணாட்டுள்ள திருவியலூரில் தங்க, அங்கிருந்த ஒரு பக்குவர் அவரையடுத்து ஞானோபதேசம் பெற்றதாகவும், உபதேசித்த குரவர் திருவியலூர் உய்யவந்ததேவநாயனு ரென்பாரென்றும், உபதேசம் பெற்றார் திருவியலூர் ஆளவந்ததேவநாயனு ரென்பாரென்றும் காட்டிப், பின்பு இவ்வாளவந்ததேவநாயனார் தம்மை யடுத்த திருக்கடவூர் உய்யவந்ததேவநாயனார்க்கு உபதேசித்தாரென்றும், இந்தத் திருக்கடவூர் உய்யவந்ததேவநாயனார் பெரும்பற்றப்புலியூராகிய தில்லைநகரி லெழுந்தருளி யிருக்குங்காலை தம்மை யடுத்த ஒரு பக்குவர்பொருட்டுத் தம் பரமாசிரியர் அருளிய திருவுந்தியார் என்ற நூலின்வழி ஓரருணூலியற்றி யுபதேசித்தன ரென்றும், அது திருக்களிற்றுப்படியாரென்ற சிறப்புப் பெயர் பெற்றதென்றும் தெரிவித்துள்ளன. இக் குறிப்புக்களையும் நூற்பொருளையும் கண்டு காலவரையறையும் ஒருவாறு தெளிவித்தனர் முற்பதிப்பாசிரியராகிய அனவரதவிநாயகம்பிள்ளையவர்கள். அவர்கள் திருவுந்தியாருக்கும் திருக்களிற்றுப்படியாருக்கும் திருவாவடுதுறையாதீனத்துத் தில்லைச்சிற்றம்பலவர் எழுதிய உரைகளைப் பதிப்பித்துள்ளார்கள்.

சமாசத்து இரண்டாம் பதிப்புச் செய்த அறிஞர் திரு. மு. அருணசலம்எம் ஏ., அவர்கள், திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் ஆகிய இவ்விரு நூலுக்கும் முற்கூறிய தில்லைச் சிற்றம்பலவரென்ற சிவப்பிரகாச ருரைகளை விடுத்து வேறு பொழிப்புரைகளைச் சேர்த்துப் பதிப்பித்துள்ளார்கள் தமது குறிப்பில் அச் சிவப்பிரகாசத் தம்பிரான் இவ்வரிய பொழிபபுரைகளைத் தழுவியே தமதுரையைச் செய்தனரெனக் காட்டியுள்ளார்கள். இப் பழைய பொழிப்புரையேடுகளின் தலைப்பில் "திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் வரலாறு" என்ற பகுதியுள்ளது இஃது அரிய செய்திகளைத் தெரிவிப்பது. ஆகலின் அதனைக் கீழே தருகின்றேன்.

"பரிபூரணமாயிருக்கிற சிவன் ஆன்மாக்களுக்குச் சிவானுபவம் விளையும் நிமித்தமாக மானுடச்சட்டை சாத்தி உய்யவந்த தேவநாயனார் என்னுந் திருநாமத்தையுஞ் சாததிக்கொண்டு வடவேங்கடந் தென்குமரி யெல்லைக்குள்ளே சஞ்சாரம் பண்ணுங் காலத்து ஒருநாள் திருவியலூரிலே எழுந்தருளினார். அவ்வூரிலேயிருக்கிற ஆளுடையதேவநாயனார் கண்டு தரிசித்தபோது

அவருடைய மலபரிபாகத்தை யறிந்து தீட்சைபண்ணி ஞான உபதேசமும் பண்ணி, திருவுந்தியார் என்று பேரிட்டு நாற்பத்து நாலு செய்யுளாக நூலும் பண்ணி அந்த நூல் முடிவிலே தம்முடைய பெயர் தோன்ற ஒரு செய்யுளும் பண்ணி அந்த நூலினுடைய தாற்பரியத்தையும் உள்ளபடி அறிவித்துச் சிறிதுநாள் சென்று தன்னியல்பை யடைந்தார். பின்பு ஆளுடையதேவநாயனார் முன்சொன்ன வெல்லைக்குள்ளே சஞ்சாரம் பண்ணுங் காலத்து ஒருநாள் திருக்கடவூரிலே எழுந்தருளினார். அவ்வூரிலே ஆட்டுவாணிபக் குலத்திலே உற்பவித்தவரொருவர் கண்டு தரிசித்தபோது அவருடைய மலபரிபாகத்தை யறிந்து தீட்சை பண்ணித் தம்முடைய ஆசாரியருடைய பெயரையுஞ் சாத்தித் திருவுந்தியாரென்கிற சாத்திரத்தையு மறிவித்துச் சிறிதுநாள் சென்று தன்னியல்பை யடைந்தார். பின்பு அந்த உய்யவந்த தேவநாயனார் முன்சொன்ன எல்லைக்குள்ளே சஞ்சாரம் பண்ணுங்காலத்திலே ஒருநாள் சிதம்பரத்திலே எழுந்தருளினார். அவ்வூரிலே ஒருவர் ஞானம் பெறவேண்டித் தலவாசம் பண்ணியிருந்து இவரைக் கண்டு தரிசித்தபோது இவர் அவரது மலபரிபாகத்தை யறிந்து தீட்சைபண்ணித் திருவுந்தியாருக்கு வழிநூலாகத் திருக்களிற்றுப்படியார் என்று நூறு செய்யுளாக ஒரு நூலும் பண்ணி அறிவித்துச் சிறிதுநாள் சென்று தன்னியல்பை யடைந்தார். திருக்களிற்றுப்படியா ரென்பதற்குக் காரணம் இவர் நூல் பண்ணினகாலத்து இவர் கீழ்ச்சாதியென்றும் இவருடைய நூல் கைக்கொள்ள லாகாதென்றுஞ் சிறிதுபேர் சொல்ல, சிறிது பக்குவராயுள்ளவர்கள் அந்த நூலைப் பஞ்சாக்கரப்படியிலே கொண்டுபோய் வைத்தார்கள். அந்தப் படியிலே செய்திருட்கிற கல்லானை (அந்நூலைத்) துதிக்கையாலே யெடுத்து எல்லாவற்றுக்கும் மேற்படியிலே கொண்டுபோய் வைத்தது. ஆகையால் (இந்நூல்) அப் பெயர்பெற்றது இந்தச் சந்தான பரமபரையை இப்படிக் கண்டுகொள்க".

பழைய பொழிப்புரைத் தொடக்கத்துள்ள இப்பகுதி இவ்வாசிரியர்களைத் தமிழ்நாட்டினராகவே தெளிவுறுத்துக் காட்டுகின்ற செய்தி பழையபதிப்புக்களின் வரலாற்றுக் கூற்றுக்கு மாறுபட்டு ஆராய்ச்சியாளர்கள் கண்ட முடிபினை வலியுறுத்துகின்றது கண்டுகொள்ளுக. இனித் திருவியலூர் ஆளுடைய தேவநாயனார் திருக்கடவூரிலே எழுந்தருளியிருந்த செய்தியும், அவ்வூரில் ஆட்டுவாணிபக் குலததிலே உற்பவித்தவராகிய உய்யவந்ததேவநாயனார் அவர்பால் உபதேசம் பெற்ற செய்தியும் கூறப்பட்டுள்ளன. இது புதுமையாக உள்ளமைகண்ட பதிப்பாசிரியர் திரு. மு. அருணசலம் எம.ஏ., அவர்கள் தமது குறிப்பில்,

"உரைத்தொடக்கத்தில் நூலாசிரியர்களின் சந்தான பரம்பரையைக் கூறுகிறார். வழக்கிலுள்ள வரலாற்றுக்கு இது சிறிது மாறுபட்டிருக்கிறது,"

என்று எழுதியுள்ளார்கள். இவர்கள் பழைய பதிப்புக்களில் எழுதியுள்ள வரலாற்றுச் செய்தியொன்றே கொண்டு இது மாறுபாடு என்று கூறியுள்ளார்கள். பழைய பொழிப்புரைக் கூற்றுக்கு நூற்பிரமாணம் காணுக்குறையால் இவ்வாறு எழுதி விட்டார்கள் இப பொழிப்புரையின் கூற்று, நூற்பிரமாணம் உடையதென எளியேன் ஈண்டுக் காட்டுகின்றதனை அறிஞர் காண்பார்களாக.

'புலியூர் வெண்பா' என்ற பெயர்சிறந்த நூலின்கண் 38-வது செய்யுளாக உள்ளது கீழ்வரும் வெண்பா ஆகும்.

"வாட்கையச வாணிபர்சொன் மாநூ லினைப்படிக்கற்
பூட்கையெடுக் கக்கொள் புலியூரே—தாட்கமலப்
போதுளவ னத்தன் புருகூதன் போற்றுமந்திப்
போதுள வனத்தன் புரி."

இதன் பொழிப்புப் பொருளாவது:—"அடித்தண்டினையுடைய தாமரைமலரினுள்ள பிரமனும், சங்கினைக் கையினுடைய திருமாலும், இந்திரனும் போற்றி வழிபடுகின்ற அந்திப் பொழுதின் செவ்வண்ணத் திருமேனியுடைய சிவபெருமான் எழுந்தருளியுள்ள ஊராவது, வாளைக் கையினுடைய ஆட்டு வாணிபர் ஆகிய பெரியார் சொல்லியருளிய சிறந்த சைவ நூலினைத் திருச்சிற்றம்பலத்துள்ள பஞ்சாக்கரப் படிக்கல்லின்கண் அமைந்த கல்லானை துதிக்கையால் எடுத்துக் கொடுத்துநிற்க அதனை ஏற்றுக்கொண்ட பெரும்பற்றப் புலியூரே ஆகும்," என்பது இந்நூலாசிரியர் தில்லைத்தலம பற்றிய புராணச் செய்திகள் பலவற்றை உமாபதியார் அருளிய கோயிற் புராணம், திருமலைநாதர் இயற்றிய சிதம்பர புராணம் இவற்றிற் கண்ட செய்திகட்கு இயையவே கூறிச் சென்றுள்ளார் என்பது இந்நூலினைப் படிப்பார்க்கு நன்கு விளங்கும். ஆகவே, இவர் நூற்பிரமாணங்களோடு தாம் செவிவழிச் செய்தியாகத் தெரிந்த இச் செய்தியினையும் தம் நூலுட் கூறியதாகவே கொள்ள வேண்டும. இவ்வாறு நூற்பிரமாணம் உண்மையின் இப்பொழிப்புரைக் கூற்றினைப் பதிப்பாசிரியர் மாறுபட்டதென ஒதுக்கிவிடுதல் பொருந்தாது எனக் காண்க.

இவ் வெண்பா திருக்களிற்றுப்படியாரருளிய பெரியாரை "வாட்கை யசவாணிபர்" எனத் தெளியக் கூறுகின்றமையால் அவர் ஆடுவிலைபகரும் வாணிபராதலின்றிக் கருவியால்

கொன்று அதனுடற் குறைத்து இறைச்சிவிற்கும் வாணிக ரெனப் புலப்படுத்து, மேல் அவர் ஞானபரிபாகம் பெறுதற் குச் சொல்லியருளிய நூல் சிறந்த அருணூலாயிற்று எனத் தெளிவுறுத்துவது அறிக. சிவஞானபரிபாகம் பெறுதற்குக் குடிப்பிறப்பு ஏது அன்று என்றும், ஆன்மபக்குவம் ஒன்றே உரியது என்றும் இச்செய்தி காட்டுவதாகும். திருத்தொண் டர் புராணத்துட் கண்ட சிவனடியாரிற் பலர் குடிப்பிறப்பு ஏதுவாகச் சிவனருட் பேற்றுக்கு விலக்காயினாரில்லை என்பது நன்கு தெளிவாகின்றது அறிக.

வியாசபாரதத்து வனபருவத்து ௨௦௬-வது அத்தியாய முதற்பத்து அத்தியாயங்களுள் போந்த "தரும வியாதர்" வர லாறு இத்திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார் வரலாற்றுக் குப் பெரிதும் ஒத்துள்ளது காண்க. கௌசிகன் என்ற பெருந் தவசி யொருவன் மிதிலைநகரில் ஆட்டிறைச்சி விற்கும் வியாத னைக் கண்டு அவன்பால் தருமோபதேசமும் ஞானபரிபாகமும் பெற்றசெய்தி அதன்கண் வந்துள்ளதனை அறிஞர் கண்டுகொள் வார்களாக.

இனி இப்பதிப்பாசிரியர் தம் குறிப்பில் "உரைகளின் இறு தியில் எழுதப்பெற்றுள்ள 'அம்பலவாண குருவே துணை,' 'நமச்சிவாய குருவே துணை' என்ற தொடர்களினால் இவ்வுரை யாசிரியர் திருவாவடுதுறை யாதீனத்தைச் சேர்ந்தவர் என்று கருதலாம்," என்றும் தெரிவித்துள்ளார்கள். இவர்கள் குறிப் பின்படி நமச்சிவாய குரு என்பார், திருவாவடுதுறையாதீனத்து முதற் குரவராவார் என்பதும், அம்பலவாண குரு என்பார்,

"உரவுதச மார்க்கசித்தி சிவாச்சிரம முபதேச முபாய நிட்டை
தெருளு நிட்டை விளக்கமே பஃறொடை சிகாமணியதிசய மாலை
திருநமச்சி வாயதுதி யெனஞான நூல்பத்துஞ் சிறப்பச் செய்தே
அருள்குருவாய்த் துறைசையம ரம்பலவா ணன்றிருத்தா—
ளணுகி வாழ்வாம்"

என்று போற்றப்பட்ட பெரியாரென்பதும் தெரிந்து கொள்ள லாம். ஆகவே இப்பெரியார்களின் வழிவந்தவர் பொழிப்புரை யாசிரியராதலின் அவர் கூற்றில் ஐயப்பாடு கொண்டு மாறு பட்டதென ஒதுக்கி விடுதல் பொருத்தமாதலில்லை வழி வழி வந்த சைவாசாரிய மரபுச் செய்தியையே அவர் கூறினாரென்பதும் அது பன்னூறாண்டுகளாக நிலைபெற்ற வழக்காறு என்பதும் கூர்ந்தறிதற்பாலன இப்பழைய பொழிப்புரையை வெளியிட் டுதவிய பதிப்பாசிரியர்க்குத் தமிழ்நாட்டறிஞர் என்றும் நன்றி யறிதலுடையராவ ரென்பது ஒருதலை.

எழுத்து ஆக்கம்*

[மயிலை, சீனி. வேங்கடசாமி]

பல்லாயிர ஆண்டுகளுக்கு முன்னே மனிதன் பேசக் கற்றுக்கொண்டான். அஃதாவது, தன் எண்ணங்களைப் பேச்சின் மூலமாகப் பிறருக்குத் தெரிவிக்கக் கற்றுக்கொண்டான். மனிதன் கற்றுக்கொண்ட பேச்சு அவனை மிருகத்தன்மையி லிருந்து மனிதத் தன்மைக்கு உயர்த்திவிட்டது. பின்னும், பல காலம் சென்ற பிறகு மனிதன், தன் எண்ணங்களையும் கருத்துக் களையும், எழுத்து மூலமாகப் பிறருக்குத் தெரிவிக்க முயற்சி செய் தான் முயற்சிசெய்து அதில் வெற்றி அடைந்தான் எழுத்துக் களைக் கண்டுபிடித்து அதன் மூலமாகத் தன் கருத்துக்களை மற்ற வர்களுக்குத்தெரிவிக்கக் கற்றுக்கொண்ட வித்தையானது, மனி தனை மிக உயர்ந்த நாகரிகத்தை அடையச் செய்துவிட்டது. எழுதப்படிக்கக் கற்றுக்கொள்ளாமல், வெறும் பேச்சோடுமட்டும் நின்றுவிட்டிருந்தால், இப்போது மனிதன் அடைந்திருக்கிற உயர்ந்த நாகரிக நிலையை அடைந்திருக்க முடியாது.

எழுத்தைக் கண்டுபிடித்த ஆதிகாலத்து மனிதர், இப்போது உலகத்திலே வழங்குகிற ஒலி எழுத்துக்களைக் கண்டுபிடிக்க வில்லை. அஃதாவது, தனித்தனியாக ஒவ்வொரு ஒலிக்கும் ஒவ்வொரு எழுத்தைக் கண்டுபிடிக்கவில்லை. உருவங்களைச் சித்திரம் வரைவதுபோல வரைந்து அவற்றின் மூலமாக அக் காலத்து மனிதர் தமது எண்ணங்களை மற்றவர்களுக்குத் தெரி வித்து வந்தார்கள். ஆதிகாலத்திலே சித்திர எழுத்துககளைப் பல நாட்டினரும் எழுதிக்கொண்டிருந்தார்கள் என்பதற்கு ஆர்க்கி யாலஜி, எபிகிராபி சான்றுகள் கிடைத்திருக்கின்றன. எகிப்து தேசததிலும சீன தேசத்திலும் அமெரிக்காக் கண்டத்து மெக்ஸிகோ நாட்டிலும். நமது இந்தியா தேசத்திலும் ஆதிகாலத் தில் ஓவிய எழுத்துகள் வழங்கிவந்தன.

நமது இந்தியா தேசத்திலே சிந்து நதிக்கரையிலே மொ ஹஞ்சதாரோ ஹாரப்பா என்னும் பெயருள்ள இரண்டு நகரங்கள் சுமார் 6 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னே சிறந்த நாகரிகம் உள்ள நகரங்களாக இருந்தன. இந்த நகரங்கள் சுமார் 4 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மண்ணில் புதைந்து மறைந்து விட்டன. அண்மைக் காலத்திலே இந்திய அரசாங்கத்து ஆர்க்கி யாலஜி இலாகா அதிகாரிகள் இந்த இடங்களைத் தோண்டிக் கிளறிப் பார்த்தபோது அங்கே பலப்பல பொருள்களைக் கண்

---

* அகில இந்திய 'வானொலியில், சென்னை நிலயத்தில் ஒலிபரப்பப் பட்டது. இசைவுபெற்று வெளிவருகிறது.

டெடுத்தார்கள். அப்படிக் கிடைத்த பொருள்களில், ஒருவகையான சித்திர எழுத்துக்கள் எழுதப்பட்ட முத்திரைகளும் ஏராளமாகக்கிடைத்தன இதனால் 4 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னே இந்தியாவில் சித்திர எழுத்துக்கள் வழங்கிவந்தன என்பது உறுதியாகத் தெரிகிறது.

மொஹஞ்சதாரோவில் காணப்பட்ட சித்திர எழுத்துக்களைப் படித்து அதன்பொருளைக் கண்டுபிடிக்க முயற்சி செய்த, பூனா பல்கலைக்கழகத்துப் பேராசிரியர் ஹீராஸ் பாதிரியார் அவர்கள், இந்தச் சித்திர எழுத்துக்கள் திராவிட (தமிழ்) மொழியுடன் தொடர்புமுடையன என்று கூறுகிறார். சில சித்திர எழுத்துக்கள், குறள்வெண்பா வாக அமைந்திருக்கின்றன என்றும் கூறுகிறார். ஆனால், இவர் கருத்தை புராதன புதை பொருள் ஆராய்ச்சிக்காரர்கள் இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை மிகப் பழைய காலத்தில் தமிழ்நாட்டிலும் சிதத்ர எழுத்துகள் வழங்கிவந்தன என்றும், அந்த எழுத்துக்களுக்குக கண் எழுத்து என்றும் ஓவிய எழுத்து என்றும் உரு எழுத்து என்றும் வேறு பெயர்கள் உண்டு என்றும் தமிழ் நூல்களிலிருந்து தெரிகிறது.

> "காணப்பட்ட உருவம் எல்லாம்
> மாணக் காட்டும் வகைமை நாடி
> வழுவில் ஓவியன் கைவினைபோல
> எழுதப் படுவது உருவெழுத் தாகும்."

என்று ஒரு பழைய இலக்கணச் சூத்திரம் கூறுகிறது.

சித்திர எழுத்துக்கள், எழுதுவதற்குச் சிரமமாக இருந்தது ஓவிய எழுத்து என்றும், கோடு கருத்துக்களைத் தெளிவாகவும் முழுமையாகவும் தெரிவிக்க முடியாதனவாக இருந்தன. ஆகவே காலக்கிரமத்தில் புதுப்புது எழுத்துக்கள் கண்டுபிடிக்கப்பட்டுக் கடைசியாக இப்போது வழங்குகிற ஒலிஎழுத்துக்கள் கண்டுபிடிக்கப்பட்டன. ஒலிஎழுத்துககள் எழுதுவதற்குச் சிரமம் இல்லாமலும் கருத்துக்களை முழுதும் தெரிவிக்கக் கூடியவைகளாகவும் இருக்கின்றன.

இந்தியா தேசத்தில் பழைய காலத்திலே சிறப்பாக வழங்கி வந்த ஒலி எழுத்துக்கள் இரண்டு. அவை, **கரோஷ்டி**, **பிராமி** என்பவை. கரோஷ்டி, இந்தியாவில் வடமேற்குப் பகுதத்தில்மட்டும் வழங்கி வந்தது. பிராமி எழுத்து வட இந்தியா முழுவதும் வழங்கி வந்தது பிராமி எழுத்தின் உற்பத்தியைப் பற்றிச் சில கதைகள் கூறப்படுகின்றன. பிரமா கண்டு பிடிததது பிராமி எழுத்து என்பர் சிலர். ரிஷப தீர்த்தங்கரரின் மகளான பிராமி என்பவள் கண்டுபிடித்தது பிராமி எழுத்து என்பர் ஜைனர்கள். கௌதம புத்தர், சிததார்த்த குமாரன் என்னும

பெயரையுடைய சிறுவராக இருந்தபோது பிராமி எழுத்தைக் கண்டுபிடித்தார் என்று க்ஷேமேந்திரர் என்பவர் தாம் இயற்றிய புத்த ஜனனம் என்னும் நூலிலே கூறுகிறார். இந்தக் கதைகளை உண்மையான சான்றுகளாகக் கொள்ளாவிட்டாலும், இவற்றிலிருந்து ஒரு உண்மை தெரிகிறது அஃது என்னவென்றால், வட இந்தியாவில் பண்டைக்காலத்தில் பெரிதும் வழக்காற்றில் இருந்துவந்த எழுத்து பிராமி எழுத்து என்பதே. பிராமி எழுத்து கி மு. 5-ஆம் நூற்றாண்டிற்கு முன்பிருந்து வழங்கப்பட்டது.

தமிழ் நாட்டிலே கி மு 3-ம நூற்றாண்டுக்கு முந்திய காலத்திலே வழங்கி வந்த தமிழ் எழுத்து இன்னது என்று இப்போது அறிய முடியவில்லை. ஆனால், ஏதோ ஒருவகையான எழுத்து வழங்கி வந்தது என்பதை உறுதியாகக் கூறலாம். பாண்டிய நாட்டிலே தலைச்சங்கம இடைச்சங்கம் கடைச்சங்கம் என்று மூன்று சங்கங்கள் ஒன்றின்பின் ஒன்றாக ஏற்படுத்தப்பட்டு முத்தமிழ்நூல்கள் ஆராயப்பட்டன என்று வரலாறு கூறுகிறது. அந்தச் சங்கங்களிலே சிவபெருமான், முருகக் கடவுள், கிருஷ்ணன், குபேரன் முதலான கடவுள்கள் அங்கத்தினராக இருந்தார்கள் என்பதையும், அந்தச் சங்கங்கள் பல ஆயிரக் கணக்கான ஆண்டுகள் நடைபெற்றுவந்தன என்பதையும் மிகைபடக்கூறல் என்று ஒதுக்கிவிடலாம். ஆனால், சங்கங்கள் இருந்தன என்பதையும் அவற்றில் முத்தமிழ்நூல்கள் ஆராயப்பட்டன என்பதையும் ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. அந்தச் சங்கங்களிலே தமிழ் நூல்கள் ஆராயப்பட்டன என்றால், அதற்கு ஏதோ ஒருவகையான எழுத்துக்கள் இருந்திருக்கவேண்டும் அல்லவா? அந்த எழுத்து இன்னது என்பது இதுவரையில் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால், கி. மு. 3-ஆம் நூற்றாண்டு முதல் கி. பி. 3-ஆம் நூற்றாண்டு வரையில தமிழ் நாட்டிலே வழங்கிவந்த எழுத்து பிராமி எழுத்துத்தான் என்பதற்குச் சிறிதும் ஐயம் இல்லை. ஏனென்றால், இதற்கு ஆர்க்கியாலஜி, எபிகிராபி சான்றுகள் கிடைத்திருக்கின்றன.

வட இந்தியாவில் வழங்கிவந்த பிராமி எழுத்து தமிழ்நாட்டிற்கு எப்படி வந்தது? பிராமி எழுத்தைத் தென் இந்தியாவிலே பரவச்செய்தவர்கள் பௌத்தபிக்ஷுக்கள் ஆவர். கி மு. 3-ஆம் நூற்றாண்டில் இந்தியாவை அரசாண்ட அசோக சக்கரவர்த்தி, பௌத்தமதத்தைப் பிரசாரம் செய்வதற்காகப் பல நாடுகளுக்கும் பௌத்தபிக்ஷுக்களை அனுப்பினார். அவ்வாறு அனுப்பப்பட்ட பிக்ஷுக்கள் இந்தியாவில் உள்ள பல நாடுகளுக்கும் சென்று பௌத்தமதப்பிரசாரம் செய்தார்கள். அவர்கள் தம்

பௌத்தமதக் கொள்கைப்படி அந்தந்த நாட்டுத் தாய்மொழியிலே பௌத்தமதக் கொள்கைகளைப் பிரசாரம் செய்துவந்தார்கள் என்றாலும், அவர்கள் எல்லா நாடுகளிலும் ஒரேவிதமாகப் பிராமி எழுத்தே வழங்கி வந்தார்கள். இவ்விதமாகப் பௌத்த பிக்ஷுக்களால் முதல்முதல் இந்தியாவிலும் தமிழ்நாட்டிலும் பிராமி எழுத்து புகுத்தப்பட்டு வழக்காற்றில் வந்தது. அன்றியும் அசோகச் சக்கரவர்த்தி, தென் இந்தியா உட்பட இந்தியா முழுவதிலும் ஆங்காங்கே பல இடங்களில் அரச சாசனங்களைக் கல்வெட்டுகளில் எழுதி அமைத்திருக்கிறார். அந்தச் சாசனங்கள் இப்போதும் இருக்கின்றன. அந்தச் சாசனங்கள் பிராமி எழுத்தினால் எழுதப்பட்டிருக்கின்றன இதனால், அசோக சக்கரவர்த்தி காலத்திலே, அதாவது கி. மு. 3-ஆம் நூற்றாண்டிலே பிராமி எழுத்து தென் இந்தியாவிலும் வழங்கப்பட்டது என்பது நன்கு விளங்குகின்றது.

கி. மு. 3-ஆம் நூற்றாண்டு முதல கி பி. 3-ஆம் நூற்றாண்டு வரையில், சுமார் 600 ஆண்டுகளாகப் பிராமி எழுத்து தமிழ்நாட்டில் வழங்கிவந்தது இதற்கு எபிகிராபி சான்றுகள் தமிழ்நாட்டிலே, முக்கியமாகப் பாண்டிய நாட்டிலே மலைக்குகைகளிலும், மலைப்பாறைகளிலும் காணப்படுகின்றன. அழகர்மலை, கழுகுமலை, நாகமலை, சித்தர்மலை, திருப்பரங்குன்றம், கொங்கர் புளியங்குளம், முத்துப்பட்டி, அரிட்டாபட்டி, குன்னக்குடி, மருகால்தலை, ஆறுநாட்டார்மலை முதலிய இடங்களில் காணப்படும் தமிழ்ச்சாசனங்கள் பிராமி எழுத்தினாலே எழுதப்பட்டவை. இவைகளைத்தவிர வேறு புதிய எபிகிராபி சான்று இப்போது கிடைத்திருக்கிறது புதுச்சேரிக்குத் தெற்கே 2 மைல் தூரத்தில் கடற்கரையோரத்திலே அரிக்கமேடு என்னும் ஒரு மேடு இருந்தது. 5 ஆண்டுகளுக்கு முன்பு இந்திய ஆர்க்கியாலஜி இலாகா அதிகாரிகள் இந்த மேட்டைக் கிளறித தோண்டிப் பார்த்தார்கள். இங்கிருந்து பல பொருள்கள் அகற்றப்பட்டன. அப்பொருள்களுடன், பிராமி எழுத்தில் எழுதப்பட்ட இவை தமிழ்மொழியாக இருக்கின்றன. அரிக்கமேடு, இற்றைக்கு 1800 ஆண்டுகளுக்கு முன்னே, அதாவது கி. பி. 2-ஆம் நூற்றாண்டில் சிறந்த துறைமுகப்பட்டினமாக இருந்தது என்று ஆர்க்கியாலஜி இலாகா ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். இந்தச் சான்றுகளினாலே, கி. மு 3-ஆம் நூற்றாண்டு முதல் கி பி. 3-ஆம் நூற்றாண்டு வரையில் தமிழ் நாட்டிலே தமிழர் பிராமி எழுத்தை வழங்கிவந்தார்கள் என்பது ஐயம் இல்லாமல் தெரிகிறது. தமிழர் பழைமையாக எழுதியிருந்த பழைய எழுத்தைக் கைவிட்டு புதிதாகப் பிராமி எழுத்தை எழுதத்தொடங்கிய

போது, தமிழ் மொழிக்கே சிறப்பாக உள்ள ள, ழ, ற, ன என்னும் எழுத்துக்கள் பிராமி எழுத்தில் இல்லாதபடியினால், இவ்வெழுத்துக்களைப் பழைமையாக வழங்கிவந்த எழுத்துக்களில் இருந்தபடியே வழங்கிவந்தார்கள்போலும்.

சுமார் கி. பி. 3-ஆம நூற்றாண்டிலே தமிழ் நாட்டிலே பிராமி எழுத்து மறைந்து வட்டெழுத்து என்னும் புதுவகையான எழுத்து வழங்கத் தொடங்கிற்று வட்டெழுத்தும், பிராமி எழுத்திலிருந்து உண்டானதுதான். அந்தக்காலத்தில் பனையோலையும் எழுத்தாணியும் எழுதுகருவிகளாக இருந்தன. பிராமி எழுத்தைப் பனையோலையில் எழுத்தாணியால் எழுதும்போது, அவ்வெழுத்தின் உருவம் மாறுதல் அடைந்து கடைசியில் வட்டெழுத்தாக மாறிவிட்டது. பண்டைக்காலத்தில் சரநாடு என்னும் பெயருடன் தமிழ்நாடாக இருநது இப்போது மலையாள நாடாக மாறிப்போன கேரள நாட்டிலே முற்காலத்தில் வழங்கி வந்த கோலெழுத்து என்பதும் வட்டெழுத்தின் திரிபேயாகும். வட்டெழுத்து தமிழ் நாட்டில் கி. பி. 3-ஆம நூற்றாண்டு முதல் கி. பி. 10-ஆம் நூற்றாண்டு வரையில் வழங்கிவந்தது. பிறகு வட்டெழுத்து மறைந்து இப்போது வழக்காற்றில் இருந்து வருகிற கிரந்த எழுத்து வழங்கி வருகிறது.

கிரந்த எழுத்தை உண்டாக்கினவர்கள் தென்னாட்டில் இருந்த பௌத்தரும் ஜைனரும் ஆவர். பௌத்தரும் ஜைனரும் தங்கள் மதநூல்களை மாகதி, அர்த்தமாகதி என்னும் பிராகிருத மொழிகளில் எழுதியிருந்தார்கள். அவர்கள் தமிழிலே தனித் தமிழ் நூல்களை எழுதியதோடு, தமது மதச்சார்பான நூல்களை பிராகிருதம், சம்ஸ்கிருதம், தமிழ் என்னும் மொழியில் உள்ள சொற்களைக் கலந்து மணிப்பிரவாள நடையில் வசன நூல்களை எழுதினார்கள். மணிப்பிரவாள நூல்களை எழுதுவதற்கு, தமிழில் க்ஷ, ஜ, ஷ, ஹ, ஸ முதலான எழுத்துக்கள் இல்லாதபடியினாலே, இவ்வெழுத்துக்களை எல்லாம் அமைத்துக் கிரந்த எழுத்து என்னும் ஒருவகை எழுத்தைக் கண்டுபிடித்து, அந்த எழுத்தினாலே மணிப்பிரவாள நூல்களையும் பிராகிருத சம்ஸ்கிருத நூல்களையும் எழுதினார்கள். இந்தக் கிரந்த எழுத்தையும் அவர்கள் பிராமி எழுத்தில் இருந்துதான் உண்டாக்கினார்கள்.

இவ்வாறு பௌத்த ஜைனர்களாலே உண்டாக்கப்பட்ட கிரந்த எழுத்து முதலில் அந்த மதத்தினரால் பயிலப்பட்டு வந்தது. பின்னர், பிற்காலத்துச் சோழ அரசர்கள் இந்தக் கிரந்த எழுத்தை ஆதரிக்கத் தொடங்கினார்கள். ஆகவே, கி. பி. 10-ஆம் நூற்றாண்டில் சோழநாட்டை அரசாண்ட ராஜராஜன்

(முதலாவன்) பாண்டியநாட்டை வென்று அந்த நாட்டிலும் கிரந்த எழுத்தை வழங்கத்தொடங்கினன் என்பதற்கு எபிகிராபி சான்று இருக்கிறது. ராஜராஜசோழன் காலத்திலே, பாண்டி நாட்டில் வழங்கிவந்த வட்டெழுத்து மறைந்து கிரந்த எழுத்து வழங்கத் தொடங்கியது. இந்தக் கிரந்த எழுத்துக் கி. பி. 10-ஆம் நூற்றுண்டுமுதல் இப்போதும் தமிழ்நாட்டில் வழங்கி வருகின்றது.

கி. மு. 3-ஆம் நூற்றுண்டில் இருந்து பிராமி எழுத்து தமிழ் நாட்டிலே வழங்கத் தொடங்கி, அதுவே காலக்கிரமத்தில் வட்டெழுத்தாகவும், கோலெழுத்தாகவும், கிரந்தஎழுத்தாகவும் வெவ்வேறு உருவம் அடைந்து இன்றளவும் வழங்கிவருகிறது.

தமிழ்எழுத்து மட்டுந்தான் பிராமி எழுத்திலிருந்து உண்டாயிற்று என்று நினைக்கவேண்டாம். தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி, மராட்டி, வங்காளி, தேவநாகிரி முதலிய எழுத்துக்கள் எல்லாம் பிராமி எழுத்திலிருந்தே உண்டானவை. ஐரோப்பாக் கண்டத்தில் உள்ள எல்லா மொழி எழுத்துக்களும் லத்தீன் எழுத்து எவ்வாறு தாய் எழுத்தாக இருந்ததோ அது போன்று, இந்தியமொழியில் உள்ள எழுத்துக்களுக்கெல்லாம் தாய் எழுத்தாக இருந்தது பிராமி எழுத்தேயாகும்.

பெயர் அணி விழா அழைப்பு

ஆணுக்கு ஆணழகாய், பெண்ணுக்குப் பெண்ணரசாய்;
நாலெட்டுத் திங்கள்களாய் நான்மகிழ்ந்து வளர்கையிலே,
அம்மை அப்பா தரும் முத்தம், அன்பணைப்பில் பங்குகொள,
இம்மாதம் (மாசி) நாலாம் நாள் என் **தம்பி பிறந்துவிட்டான்!**
பொடிப்பயல் என் சுதந்திரத்தில் போட்டியென வந்துவிட்டான்!
ஆயினும் யான் அவனுடனே அமராடப் போவதில்லை;
என் தம்பி, என்செல்வம், இன்பமணி, வீரனுடன்
அன்பு, கலை, தமிழ், பொறுமை அனைத்தும் எம் இலட்சிமாய்க்
கொண்டெங்கள் வாழ்க்கையினை விளையாட்டாய் நடத்திடுவோம்!
அன்னவனைப் பெயர் சொலி நான் அழைத்திடவே பொருத்தமு[ள்ள]
அழகு தமிழ்ப் பெயர் ஒன்றை என் அப்பா சூட்டிடுவார்.
அந்த விழா (7-3-51) கண்டிடவும், ஆண்டு நூறு என் தம்பி
வாழ்ந்திடவே, வாழ்த்துரைகள் வழங்கிடவும் உரிமையுடன்
வாருங்கள்! வாருங்கள்! அக்கா-நான் அழைக்கின்றேன்!

முத்தமிழ்விழா வரவேற்புரை*

[திரு. கா. பொ. இரத்தினம் அவர்கள், B. A. (Hons), B. O. L.]

ஓரின மக்களுடைய சிறந்த நாகரிகம் அம்மக்கள் பேசும் மொழியின் சிறப்பையும் அவர்களுடைய கலைஞானப் பெருக்கையும் பொறுத்ததென்பதை யாவரும் அறிவர். நாகரிகத்துக்குக் காரணமான உயர்ந்த பண்பாடு கலைஞானத்தாலே உண்டாவது. இப்பண்பாட்டை வளம்பெறச் செய்யும் பல கலைகளுள்ளும் சிறந்தன இன்பக்கலைகள் அல்லது அருங்கலைகள் எனப்படும் இலக்கியம், இசை, நாடகம், சிற்பம், ஓவியம் முதலியனவாகும்.

முத்தமிழ்க் கலைகள்

இவற்றுள்ளும், மொழியுடன் இணைந்த இலக்கியம், இசை, நாடகம் என்பனவே மிகச் சிறந்தன. மொழிஅறிவு மக்களை எவ்வாறு விலங்குகளினின்றும் பிரித்து உயர்த்துகிறதோ அவ்வாறே இலக்கியம், இசை, நாடகம் எனும் கலைகள் இவற்றைப் பயின்றோரை ஏனைய மக்களினின்றும் பிரித்து உயர்த்திப் பொலியச் செய்கின்றன. மக்கள் — இன்பவாழ்வை — அமர வாழ்வை வாழுதற்கு இம்மூன்று கலைகளும் இன்றியமையாதன. இவை சிறந்தோங்கி விளங்கும் நாட்டிலே ஏனைய கலைகள் யாவும் மலர்ந்து விளங்கி நற்பயனை நல்கும். இம்மூன்று கலைகளும் ஒன்றாக வளர்ந்து பொலிந்தாற்றான் மொழிவளர்ச்சியும் மக்கள் உளவளர்ச்சியும் சிறக்கும் இந்தப் பேருண்மையினை அறிந்து இவற்றை ஒன்றாகச் சேர்த்து வளர்த்த தனிப்பெருமை தமிழ் இனத்துக்கே உரியது. இம்மூன்றையும் தமிழ்மக்கள் முத்தமிழ் என வழங்கினர். தமிழ் வளர்த்த சங்கங்கள் இம்முத்தமிழினையும் நன்கு வளர்த்தன. கிறித்து பிறப்பதற்கு முன்னரே முத்தமிழ்க்கலைகள் தமிழ்நாட்டிலே சிறந்த வளர்ச்சியை அடைந்திருந்தன. தமிழ்ப்புலவர்பலர் முத்தமிழ்ப் புலவர்களாக விளங்கினர். இசையிலும் நாடகத்திலும் ஈடுபட்ட புலவர்கள் **நெடும்பல்லியத்தனார், முதுகூத்தனார், மதுரைத் தமிழ்க்கூத்தனார்** முதலிய காரணப்பெயர்களைப் பெற்றார்கள். பல முத்தமிழ் இலக்கியங்களும், இலக்கணங்களும் இயற்றப்பட்டன. இளங்கோவடிகள் பதினெட்டு நூற்றாண்டுகட்கு முன்னர் **முத்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரத்தை** இயற்றி முத்தமிழை என்றும் நின்று நிலவச்செய்தார்.

---

* கொழும்புமாநகரிலே இலங்கை வானொலித் தமிழ்க்கலைமன்றம் எடுத்த முத்தமிழ்விழாவில் நிகழ்த்திய உரையைத் தழுவியது.

அக்காலத்திலே தமிழ்மக்கள் இலக்கியங்களை ஆர்வத்துடன் படித்தார்கள்: இசைவிருந்துகளையும் நாடகக்காட்சிகளையும் அனுபவித்தார்கள். "பாடல் ஓர்த்தும் நாடக நயந்தும்," என்று பட்டினப்பாலையும், "பண்கனியப் பருகிப் பயனுடைகம் கண்கனியக் கவர்ந்து உண்டு," என்று சீவகசிந்தாமணியும் கூறுவன காண்க.

"சங்கத்தமிழ் மூன்றுந்தா"

இடைக்காலத்திலே தமிழ்நாடு இடைக்கிடையே அன்னியர் ஆட்சிக்குட்பட்டதாலும் பிற காரணங்களாலும் முத்தமிழ் வளர்ச்சி குன்றியது. எனினும், அவ்வக்காலப் பகுதியிலே தோன்றிய தமிழ்ப்பெரும்புலவர்கள், முத்தமிழ்வளர்ச்சி இன்றியமையாதது என்பதைத் தமது நூல்களினூலே நன்கு புலப்படுத்தியுள்ளனர். பெருங்கதையும், சீவகசிந்தாமணியும் ஆடல் பாடல்களை அழகாக வருணித்துள்ளன. ஔவையார "சங்கத்தமிழ் மூன்றுந் தா" என்று கடவுளை வேண்டினூர். கம்பர் தமது காவியத்தில் அவையடக்கங் கூறும்பொழுது, "முத்தமிழ்த் துறையின் முறைபோகிய உத்தமக் கவிகளுக்கே" தாமுரைப்பதாகப் பாடினூர். தமிழ்மக்கள் தமது ஓய்வுநேரங்களை இலக்கியம், இசை, நாடகங்களி லீடுபடுத்தி இன்பமடைய வேண்டுமென்றுங் கம்பர் கருதினூர். இக்கருததை இராமாயணத்தில் பல இடங்களிலே குறிபபிட்டுள்ளார் "பருந்தொடு நிழல் சென்று அன்ன இயல் இசைப்பயன் துய்ப்பாரும், மருந்தினும் இனிய கேள்வி மாந்துவாரும்" எனும் அவர் கூற்றை ஆராய்ந்து பாருங்கள். நிற்க,

சென்ற நூற்றுண்டிலே தமிழ்நாட்டில் ஏற்பட்ட ஆங்கில மோகத்தாலும், அதற்கு முந்திய நூற்றுண்டுகளிலே சமயம், அரசியல், பொருளாதாரம் முதலிய துறைகளிலே நிகழ்ந்த மாறுதல்களாலும் தமிழ்இலக்கியமும், தமிழ்இசையும், நாடகமும் போற்றுவாரற்றுக் கீழ்நிலை யடைந்தன.

தாய்மொழி இலக்கியத்தின் தனிமாண்பு

நமது மொழியிலுள்ள இலக்கியச்செல்வங்களை நம்மில் எத்தனைபேர் இப்பொழுது அனுபவிக்கிறூர்கள்? இந்த உலகத்திலே ஏறக்குறைய மூவாயிரம் மொழிகள் வழக்கிலிருக்கின்றன இவற்றுட் பதினைந்துமொழிகளே திருந்திய மொழிகளாகும். இம்மொழிகளுள் பேச்சுவழக்கில் இருப்பவற்றுள் எல்லாம் மிகப் பழையது, எமது தமிழ்மொழியேயாகும். இத்தகைய தனிப்பெருமைவாய்ந்த மொழியினைத் தாய்மொழியாகக்

கொண்டு வாழும் தமிழ்மக்கள் யாவரும் இம்மொழியிலுள்ள இலக்கியங்களைப் படித்துப் பயன்பெறக் காணோம். தன் தாய்மொழியிலுள்ள இலக்கியத்தைக் கற்காத ஒருவன், வேறெவற்றைக் கற்றாலும் நிரம்பிய கல்விமானாகிவிட முடியாது என்று இப்பொழுது பேறுபெற்றோர் கூறுகிறார்கள். கல்வியின் நோக்கம் நன்கு நிறைவேறவேண்டுமெனில், மக்கள் சிறந்த இலக்கிய நூல்களைக் கற்றல்வேண்டுமெனச் சிக்காக்கோ பல்கலை கழகத்தலைவர் டாக்டர் ரேபேட், எம். கட்சின்ஸ் கூறிச் சிறந்த இலக்கிய நூல்களை அடக்கி ஒரு பட்டியலும் அமைத்திருக்கிறார். இந்த உண்மைகளை நமது முன்னோர் நன்கறிந்திருந்தனர். நாம் கட்டாயமாகப் படிக்கவேண்டிய நூல்கள் சிலவற்றை அவர்கள் பழமொழிகள், பாட்டுக்கள் வாயிலாக எடுத்துரைத்துள்ளனர்.

"நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி," எனும் பழமொழி நாலடியாரையும் திருக்குறளையும் படிக்கவேண்டுமென்பதைப் புலப்படுத்துகிறது "தேவர் குறளும் திருநான்மறை முடிவும்" எனும் ஔவையார் பாடலும், "வள்ளுவர் சிரன்பர் மொழி" என்றும், "திருத்தக்கதேவர் சிந்தாமணி" என்றும் தொடங்கும் பாட்டுக்களும், தமிழ்மக்கள் யாவரும் படித்துப் பயனடைய வேண்டிய நூல்களைக் குறிக்கின்றன. திருக்குறள், சிலப்பதிகாரம், கம்ப இராமாயணம் எனும் மூன்றையும் தமிழ் மக்கள் நன்கு படிக்கவேண்டுமென்று பாரதியார் உரைத்துள்ளார். நம் முன்னோர் திருப்பித் திருப்பிக் கூறிய இந்தப் பொருளுரை களைத் தமிழமக்கள் சிறிதேனும் போற்றுகிறார்களா ?

உலகப் பொதுநூல்

தமிழ்மக்களுக்கும் தமிழ்மொழிக்கும் பெருமைஅளிக்கும் உலகப் பெருநூலாகிய தெய்வத் திருக்குறளை எத்தனை தமிழர்கள் முறையாகக் கற்கிறார்கள். இத்திருக்குறளைக் கற்பதற்குக் காந்தியடிகள் தமிழினைக் கற்றார்; பல்வேறு நாட்டு மக்கள் தத்தம் மொழியிலே அதனை மொழிபெயர்த்தார்கள். ஆனால், தமிழ்மக்களாகிய நாம் என்ன செய்கின்றோம்? இக் கொழும்புமாநகரில் வாழும் தமிழ்மக்களில் எத்தனைபேரிடம் திருக்குறட் புத்தகங்கள் உண்டு. ஆங்கிலங் கற்று, உயர்ந்த பதவிகளை அடைந்து வாழும் தமிழ்மக்களுடைய புத்தகப் பேழைகளில் ஆங்கிலநூல்கள் வாழும்; இலத்தீன் கிரேக்க நூல்கள் தூங்கும்; ஆனால், திருக்குறளை அவற்றுளே காணமுடியுமா? வள்ளுவர் வாக்கைப் படிக்கும் ஆற்றல் அப்பெரியார்களுக்கு இல்லாவிடில், டாக்டர் போப் ஆக்கிய மொழிபெயர்ப்பு நூலையாயினும் அவர்கள் படிக்கலாமே!

உலகத்தவர் யாவரும் சிறந்த நூலெனப் போற்றும் திருக்குறளையேனும் படித்தறிய முயலாது வாழும் தமிழ்மக்கள் பாரதியார் பாடியபடி "நாமமது தமிழரெனக் கொண்டு" வாழ்பவர்களே யாவார்கள். இனியாகுதல் தமிழ்மொழியிலுள்ள சிறந்த இலக்கியங்களைப் போற்றிக் கற்கத் தமிழ்மக்கள் யாவரும் முயல்வார்களாக. தமிழர்களுடைய வீட்டிலே திருக்குறளும், அவர்களுடைய உள்ளத்திலே திருக்குறள்காட்டும் சீரிய நெறியும் திகழ்ந்தாற்றான் தமிழினம் தலைநிமிர்ந்து நிற்கலாம்; தாழ்வின்றி வாழலாம.

கர்நாடக சங்கீதமும் தமிழிசையும்

இனித், தமிழிசை பற்றியும் சில கூறல் இயைபுடைத்து. தமிழிசை என்றால் இப்பொழுது பலருக்கு விளங்காது. கர்நாடக சங்கீதமென்றால் நன்கு புரியும் இந்தக் கர்நாடகம் எனும் பெயரே ஒரு 'கருநாடகம்'தான். தமிழன் தன்மானத்தை இழந்துவிட்டான் என்பதைத்தான் நமது இசையையும் கர்நாடக சங்கீதம் என்று இன்றும் நாம் வழங்குவதும், நம் பாடகர்கள வாயிலாக அளவின்றிப் பிறக்கும் தெலுங்குப் பாடல்களும் காட்டுகின்றன. கர்நாடக சங்கீதம் எனுஞ் சொற்றொடர் பதின்மூன்றாம் நூற்றாண்டிலெழுந்த நூல்களிலேயே காணப்படுகிறது. கன்னட தேசத்தைக் குறிக்கும் கார்நாடு எனுந் தொடர் கர்நாடகமாயிற்றென்பர் மொழிநூலறிஞர்.

தெலுங்கு கன்னட மொழிகள் தோன்றுவதற்கு முன்னர் இசையால் இசைவளர்த்த தமிழ்மொழியின் இசையைப் பிறமொழிகளுக்கு அடிமைப்படுத்துவதும், தமிழர்கள் பொருளறியாது தெலுங்குப் பாடல்களைப் பாடுதலும் அழகாகாது. கி பி. பதினாலாம நூற்றாண்டிலே தெலுங்கர்களுடைய விசயநகர ராச்சியம் சிறந்து ஓங்கித் தமிழ்நாட்டையும் தன் ஆட்சிக்குட்படுத்திற்று. அதனால் தெலுங்கு மொழியின் ஆதிககம் எங்கும் ஏற்பட்டது. தெலுங்கர்களுடன் தெலுங்குப்பாடல்களும் தமிழ்நாட்டிற் புகுந்தன. இத்தெலுங்குப்பாடல்கள் மூலம் கர்நாடகசங்கீதம் நிலைபெற்று

கர்நாடகசஙகீததது்ககும அடிபபடை தமிழிசையே என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும்

தமிழின் ஓசைநயம்

ஒரு மொழியின் ஓசைநயத்தை வளம்பெறச் செய்வன மோனை, எதுகை முதலிய தொடைகளும், பல்வேறுவகையான

யாப்புக்களுமேயாகும். தமிழிலேயுள்ள தொடைகளின்வகை 13708 எனத் தொல்காப்பியர் கணக்கிட்டார். இவ்வளவு தொகையான தொடைகளையும் தமிழிலுள்ள பாவும் பாவினங்களும் போன்ற அளவில்லாத யாப்பின் வகைகளையும் வேறெம்மொழியிலுங் காணமுடியாது தமிழின் ஓசைநயத்தின் சிறப்பைப் புலப் படுத்தவே, "பல்லோசைத்தமிழ்" என்று சம்பந்தரும், "ஒண்டீந் தமிழே"ன்று மணிவாசகரும் கூறினார்கள். "வண்டு தமிழ்ப் பாட்டிசைக்குந்தாமரையே" என்று கம்பர் பாடித் தமிழின் இனிமையைச் சிறப்பாக வெளிப்படுத்தினார். 'யாமறிந்த மொழி களிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்குங்காணோம்" என்று பாரதியார் உணர்ச்சிததும்ப உண்மையை உரைத்தார். இத் தகைய இனிய தமிழ்—தீந்தமிழ்—இசைக்கு ஏற்றதன்று என்று யாரேனுங் கருதுவார்களா? "பண்ணாரின் தமிழாய்" என்பதும் "தமிழோடிசை கேட்கும் இச்சையால்" என்பதும் சுந்தரர் திருவாக்குக்கள் இவற்றின் பொருளைச் சிறிது சிந்தித்துப் பாருங்கள். "தமிழோடிசைபாடல் மறந்தறியேன்," என்று பாடித் தமிழிசையினைவளர்த்த நாவுக்கரசர் வாழ்ந்த தமிழ்நாட்டிலே "தமிழோடிசை பாட அறியோம்," என்று சொல்லும் நிலைமை அன்றோ இன்று காணப்படுகிறது. அருந்தமிழின் வழக்கு நிகழாத இடங்களிலும் தமிழ்இசையினைப் பாடவேண்டும் என்று சம்பந்தர் கருதினார் என்பதைச் சேக்கிழார் கூறுகின்றார். ஆனால் இப்பொழுது நம் நாட்டிலே நாம் தெலுங்கோடிசை பாடுகிறோம். இந்த நிலைமை அடியோடு மாறவேண்டும். கர்நாடகசங்கீதம் என்ற பெயர் தோன்றுமுன் சிறந்துயர்ந்து விளங்கிய தமிழிசையினை வளர்த்தல் வேண்டும். உணர்ச்சிமிக்க தமிழறிஞர் சிலர் தமிழ்இசைப் பாடல்கள் பல இயற்றி இசைவகுத்தும் வகுப்பித் தும் வருகிறார்கள். இம்முயற்சி சிறக்குமாக.

நமது இசையினைத் தமிழிசையென்றே வழங்கவேண்டும்

இசைப்பாடல்களுக்கு இசைவகுக்கும் முறை தமிழ்மக்கள் பிறநாட்டாரிடமிருந்து புதிதாகக் கற்றுக்கொண்ட பாடமன்று. ஈராயிரம ஆண்டுகளுக்குமுன்—இந்தியாவில் இப்பொழுது பேச்சு வழக்கில் இருக்கும் மொழிகள்யாவும் தோன்றுமுன்— தமிழறிஞர்கள் இசைப்பாடல்களைப்பாடி இசைவகுத்து வைத் தார்கள். இதற்குப் பரிபாடல் என்னும் அரியநூல் சான்றாகும். இந்நூலிலுள்ள இசைப்பாடல்களைப் பாடினவர்களும் இப் பாடல்களுக்கு இசைவகுத்தவர்களும் பலராவார். அவர்களின் பெயர்கள் இன்றும் நின்று நிலவுகின்றன. இவர்களின் அடிச் சுவட்டைப் பின்பற்றிக் கர்நாடகசங்கீதம் எனும் பெயரை நீக்கி விட்டு நமது இசையினைத் தமிழ்இசையென்றே வழங்குதலும்

அதனைப் பல்லாற்றானும் வளரச்செய்தலும் இன்றியமையாதன. இந்த அரிய பணியினைச் சென்னைமாகாணத் தமிழ்இசைச் சங்கத்தார் செய்து வருகின்றனர். அவர்களுடன் இலங்கைத் தமிழ்மக்கள் ஒத்துழைத்தல் வேண்டும். இங்குள்ள தமிழ்த் தலைவர்கள் குருட்டாட்டமாடாது, தமிழ்மக்களுக்கிடையே புத்துணர்ச்சியையும் கிளர்ச்சியையும் உண்டாக்கத்தக்க முறையில் தமிழிசை விழாக்களையும் நடத்துதல் நன்று.

தமிழ்நாட்டில் வண்டுகளும் நடனம் ஆடின

முத்தமிழில் மூன்றாவது நாடகத்தமிழாகும். நாடகத்தமிழுக்கு இசைத்தமிழ் இன்றியமையாதது தமிழ்நாட்டிலே மயில், தும்பி, பூங்கொடி முதலியனகூட வண்டு, அருவி, மேகம், கலைமான் முதலியவற்றின் இசையுடன் நடனம் ஆடின என்று புலவர்கள் பாடியுளர். இஃது அக்காலத்திலே தமிழ்மக்கள் நாடகத்தை எவ்வாறு போற்றி அனுபவித்தார்கள் என்பதையும் நாடகக்கலையின் வளர்ச்சியையும் நன்கு புலப்படுத்துகிறது.

"கொம்பர்த் தும்பி குழலிசை காட்டப்
பொங்கர் வண்டினம் நல்யாழ் செய்ய
வரிக்குயில் பாட மாமயில் ஆடும்
விரைப்பூம் பந்தர்"

எனும் அடிகளிலே ஒரு பூம்பந்தரிலே நடந்த இயற்கையான ஆடல் பாடல்களை அழகாக வருணித்திருக்கிறார் சாத்தனார் எனும் பெரும்புலவர். தமிழ்மக்கள் ஆடலையும் பாடலையும் ஒன்றாக வளர்த்தார்கள். தமிழ்நாட்டு வண்டுகள்கூடத் தாளத்துடன் பாடித் தாளத்திற்கும் பாட்டின் சீர்க்கும் பொருந்தச் சிறைவிரித்தாடின என்று பரிபாடல் கூறுகிறது. இச்செய்தியைக்கூறும் பாடற்பகுதி "பண்கண்டு திறனெய்தாப் பண்தாளம் பெறப்பாடிக்கொண்ட இன்னிசைத்தாளம் கொளை சீர்க்கும் விரித்தாடும் தண்தும்பி இனம்" என்பதே.

நாடகக்கலையின் நுட்பங்கள்

மாதவியின் ஆடலையும் பாடலையும் அழகாகச் சிலப்பதிகாரஞ் சித்திரிக்கிறது. மாதவியின் ஆடல்பாடலுக்கு உதவி புரிந்த ஆடலாசிரியன், இசையாசிரியன், கவிஞன் எனும் முத்தமிழ் ஆசிரியர்களின் அமைதியினையும், குழலோன் யாழோன், தண்ணுமையோன் முதலிய கருவியாளர்களின் அமைதியினையும் அந்நூல் திறம்பட உரைக்கிறது அரங்கேற்று காதையிலே மாதவி பன்னீராண்டாகக் கற்ற ஆடல்பாடல்களை அரசன்முன் அரங்கேற்றிப் பரிசுபெற்ற வரலாறு விரிவாக வரையப்பட்

ளுள்ளது நாடக அரங்கிலே அவள் ஏறும்பொழுது, "வலக்கால் முன்மிதித்து ஏறி அரங்கத்தின் வலத்தூண் சேர்ந்தாள்," என்று நுட்பமாக இளங்கோவடிகள் அக்காலவழக்கை எடுத்துக் கூறியிருக்கின்றார். பாடுவோர், வாத்தியங்களை இயற்றுவோர், ஆடுவோர் நாடகமேடையில் இவ்வளவு இவ்வளவு தூரத்திலே நிற்கவேண்டுமென்றும் அக்காலத்திலே வகுத்து வைத்திருந் தார்கள். இதுமாத்திரமே நாடகக்கலை எவ்வளவு நுட்பமாக வளர்க்கப்பட்டதென்பதை நன்கு காட்டப் போதுமானது.

ஆடலுடன் பாடல் சேரவேண்டும்

சீவக சிந்தாமணி சமணசமயக்கதையைக் கூறுவதாயினும் அதன் ஆசிரியர் தமிழ்நாட்டு இசை நாடகங்களின் நுட்பங் களையே அதிலும் எடுத்துக்கூறியுள்ளார். தேசிகப்பாவை எனும் பெண்ணினுடைய ஆடலை வர்ணிக்கும்பொழுது அவர் "பாடலோ டியைந்தஆடற் பண்ணமை கருவி மூன்றும், கூடு பு சிவணி நின்று குழைந்தி ழைந்து அமிர்தம் ஊற....ஆடுகின்றாள்" என ஆடல் பாடல் வாத்தியம் சேர்த்துக்கூறினார். ஆடல், பாடல், வாத்தியம் எனும் இம்மூன்றினையும் "கொட்டாட்டுப் பாடல்" என்று முற்காலமக்கள் வழங்கினர் என்பதைத் தேவா ரங்கள் வெளிப்படுத்துகின்றன இடைக்காலத்திலே நாட்டியக் கலை கணிகையர் கைப்பட்டுத் தன் பழம்பெருமையை இழந்த தாயினும் அஃது இக்காலத்தில் நன்கு விருத்தியடைதற்குரிய அறிகுறிகள் காணப்படுகின்றன தமிழ்நாட்டின் பல பகுதி களிலும் நாட்டிய அரங்கேற்ற விழாக்கள் இப்பொழுது நிகழ் கின்றன. என்றாலும், இக்காலத்தில் நடனம் பயில்கிறவர்கள் இசைப்பயிற்சியிலே போதிய கருத்துச் செலுத்துகிறார்கள் இல்லை. இக்குறையை நீக்கிவிடவேண்டும்.

முத்தமிழின் தொடர்பு

"பண்ணென்னும் பாடற்கு இயை பின்றேல்" எனும் வள்ளுவர் வாக்கும், "விளியாதான் கூத்துக் காண்டலும்" எனும் திரிகடுகப் பகுதியும் பாட்டுக்கு ஏற்றதாகஇசையும். இசைப்பாடலோடு நாடக மும் அமைந்திருக்க வேண்டும் எனும் பேருண்மையினை விளக்கு கின்றன. அன்றியும் இவை முத்தமிழ்களின் தொடர்பையும் நமக்குத் தெள்ளத் தெளியக் காட்டுகின்றன ஆகவே முத்தமிழ்களுக் கிடை யிலுள்ள இந்தத் தொடர்பையும் அவற்றின் பெருமையையும் நாம் நன்கு அறிந்து அவற்றை மேலும் மேலும் வளர்க்க முயலுவோமாக. இது தான் தமிழினத்துக்கு நாம் செய்யுந் தொண்டுகளுள் சிறந்தது

எது வேண்டும்?

[முத்தமிழ்மணி]

பண் - சிந்துபைரவி. தாளம் - ஆதி.

எது வேண்டுஞ் சொல் தமிழா?—தமிழா! (எது)

மதிசேர உயர்வுற்று வாழ்வதா?—விதி
வழிசென்று தாழ்வுற்றுச் சாவதா?—இதில் (எது)

1. கலைவேண்டு மென்பதுன் நோக்கமா?—விடு
தலைவேண்டு மென்பதுன் ஏக்கமா?—என்றும்
நிலையான தமிழ்நாட்டின் ஆக்கமா?—அன்றி
நிலையற்ற மடமையின் தேக்கமா?—இதில் (எது)

2. போராட்ட மேற்கொண்டு செல்வதா?—சொல்
மாறாட்டம் செய்வோரைக் வெல்வதா?—இன்றி
சூதாட் டமேபுகுந் தழிவதா?—முழுச்
சோம்பலி னுடல் மாய்வதா?—இதில் (எது)

3. அழியாத கலை வேண்டுமா?—அன்றி
அலைமோதும் நிலை வேண்டுமா?—தீங்
கனிபோலுந் தமிழ் வேண்டுமா?—வெற்றுக்
காய் வேண்டுமா? பிஞ்சு
பூ வேண்டுமா?—இதில் (எது)

4 மலைபோன்ற திறம் வேண்டுமா?—போரில்
மார்தட்டும் உரம் வேண்டுமா?—உயர்
விலைமிக்க நிலை வேண்டுமா?—அன்றி
விழ வேண்டுமா குழியில்?
எழ வேண்டுமா உலகில்?—இதில் (எது)

5 எஞ்ஞான்றும் புகழ் வேண்டுமா?—இன்றி
இழிவான தொழில் வேண்டுமா?—நாட்டில்
விஞ்ஞான வளம் வேண்டுமா?—அன்றி
விழ வேண்டுமா குழியில்?
எழ வேண்டுமா உலகில்?—இதில் (எது)

அற ஆட்சிக்கு அன்புமுறை

[கௌசல்யா சோமசுந்தரம்]

உலகில் அமைதி நிலவ வேண்டுமானால் மக்கள் இன்ப வாழ்வு வாழ வேண்டும். இன்பவாழ்வு அறவழி வாழ்வதால் தான் வாய்க்கும்.

'அறத்தான் வருவதே இன்பமற் றெல்லாம்
புறத்த புகழும் இல.' —திருக்குறள், ௩௯.

மக்கள் அறவாழ்வு வாழ்தல் கைகூட, அறவழிப்படி ஆட்சி நடத்தப்பட வேண்டும். அத்தகைய அறஆட்சியும் அன்புமுறையில் நிறுவப்பட வேண்டும். உலகின் இன்றைய மக்கள் வாழ்க்கைமுறையைக் கெடுக்கும் உரமான ஆற்றல் பொருளாதார முறைகளில் இருக்கிறது ஒரு நாட்டின் பொருளாதாரப் போக்கு மற்ற நாடுகளின் வாழ்வைக் கெடுக்கிறது. ஒரு நாட்டின் பொருளாதாரப் போக்கின் வேர், அந்நாட்டிலுள்ள ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கைப்போக்கில் இருந்தும் எழுகிறது. ஆகவே உலகநிலைமையின் உண்மை ஊற்றுக்கண் தனிமனிதனின் வாழ்வே ஆகும். தனிமனிதனுடைய அன்றாட வாழ்வு சீர்திருத்தப்பட்டால் உலகநிலை சீர்திருந்தும். இது அடிப்படையான உண்மை. இஃது ஒழுக்க, பொருளாதார, அரசியல், ஆருயிர்த்துறை ஆகிய ஒவ்வொன்றுக்கும் பொருந்தும். ஆகவே பொருளாதாரத்துறையில் அறவழி வாழ்தல் உலக அமைதி கூட்டுவிக்கும் என்பது திண்ணம். இக்கருத்தை விளக்கப் பொருள்அறிஞர் J. C குமரப்பா ஒரு கட்டுரை எழுதி உள்ளார். இவர், காந்தி அடிகளின் தூண்டுதலால் துவக்கப்பட்ட அகில இந்திய கிராமக் கைத்தொழிற்கழகத்தின் தலைவராவர். அக்கழகத்தின் திங்கள் இதழான 'கிராமத்தொழில்' இதழ் (கிராம உததியோகபத்திரிகை)யின் 1950-ம் ஆண்டின் சனவரி மாத வெளியீட்டில் கீழ்க்கண்ட கட்டுரை காணப்படுகிறது.

தனிமனிதனும் உலக அமைதியும்

தற்காலப் போர்கள் எழும் காரணங்களைக் கூர்ந்து கவனித்தால் நாம் பார்ப்பது என்ன? இயற்கை வளங்களை, பெருந்தொழிற்சாலைப்பொருள்களைச் செய்து குவித்து ஏகபோக உரிமையாக்க முயல்வதனாலேயே போராட்டங்கள் எழுகின்றன. இப்பெருந் தொழிற்சாலைகள் ஒரே மாதிரியான பொருள்களை ஒரே இடத்தில் ஏராளமாகச் செய்து குவிப்பதற்கு அமைக்கப்படுகின்றன. இவ்வகைத் திட்டத்தில் பொருட்களைச் செய்யும்

இயந்திரப் பொறிகள் ஓர் இடத்தில் இருக்கின்றன அவைகளுக்கு வேண்டிய மூலப் பொருள்கள் உலகில் மிகத் தொலைவிலுள்ள பாகங்களிலிருந்து கொண்டு வரவேண்டி இருக்கின்றன. அந்தப் பொறிகளை இயக்கவேண்டிய ஆற்றலையோ (மின் ஆற்றல்), ஆற்றல் அளிக்கும் பொருள்களையோ (நிலக்கரி, எண்ணெய்கள்) வேறு இடங்களிலிருந்து கொண்டுவரவேண்டி இருக்கிறது. இத்தொழிற்சாலைகளில் செய்யப்படும் பொருள்களை விற்பதற்கு வேண்டிய சந்தைகளை (மார்க்கெட்டுகளை) உலகில் மற்ற இடங்களில் பிடித்துவைக்க வேண்டி இருக்கிறது. இப்படி ஓரிடத்தில் ஏராளமாகப் பொருள்களைச் செய்து குவிக்கும் பொருளாதாரத் திட்டத்தில் பொதுவாகப் பொருள்களைச் செய்வது, வழங்குவது (விநியோகிப்பது), அவைகளைப பயன்படுத்துவது ஆகிய மூன்றுவகைச் செயல்களையும் ஒரு பொதுவான கட்டுப்பாட்டுக்குள் வைக்க வேண்டி இருக்கிறது. இததகைய பொருளாதார அமைப்பில் தொழிற்சாலைகளுக்கு வேண்டிய மூலப்பொருள்களும், பொருள்களைச்செய்து குவிக்கும் தொழிற்சாலைகளும், மேற்படி பொருள்களை விற்பனைசெய்யும் சநதைகளும், உலகின் வெவ்வேறு பாகங்களிலே இருப்பவை. ஆனால் அம்மூன்றினையும் ஒரு பொது அதிகாரத்துக்குள் கொண்டு வந்து அடக்கிவைக்க வேண்டி இருக்கிறது. அப்பொழுது தான் ஒரே கருத்துடனும், கொள்கையுடனும், நடைமுறைத் திட்டத்துடனும மேற்படி பொருளகளைச் செய்வதும், பொருளகளைச் சந்தைகளுக்கு அனுப்பி வழங்குவதும, மூலப் பொருளகளைக் கொணர்வதும தங்கு தடையின்றி நடைபெறும. இப்படி அம்மூன்றினையும ஓர் ஆளுகைக்குள் கொண்டுவர எளிதான வழி அவைகளை வலுக்கட்டாயத்தால் இணைப்பதே ஆகும். ஆதலால் போரிடும் நாடுகளால் விளைவிக்கப்படும் நாசவேலைகளை நீக்கவேண்டுமானால், இந்தப் போருக்கு மூல காரணமான மேற்படி வலுக்கட்டாய இணைப்புச் செய்வது போன்ற பொருளாதார முறைகளைக் கவனித்து மாற்றவேண்டும். மேற்படி வலுக்கட்டாயப் பொருளாதார இணைப்பின் தேவையும், அதைப்பற்றி எழும் பொறாமையும், பேராசையும், அவை எழுப்பும் வெறுப்புகளும், எதிர்ப்புகளுமேதான் கடும்போர்களுக்குக் காரணம். ஆதலால் நாம் காணும் போர்கள் எழாதிருக்க அவைகளை உண்டாக்கும் அடிப்படைக் காரணங்களை அகற்றவேண்டும். அதற்குத் தொடர்புடைய கருப்பொருள்களை உண்டாக்குபவர்களும், அவைகளை விநியோகிப்பவர்களும், அதைவிடப் பெரும்பாலோரான மேற்படி பொருள்களைப் பயன்படுத்துபவர்களும் இதன் நிலைபற்றிக் கவனித்து நடக்கவேண்டும். இப்போதைய நிலையில் பொருள்களைச் செய்

வோரும், விநியோகிப்போருமான இருகூட்டத்தாரும் பொதுவாக அரசாங்கங்களின்மேல் ஆதிக்கம் உடையோராய் இருக்கிறார்கள். அந்த ஆதிக்கத்தினால் தங்களுக்கு வேண்டிய சந்தைகளை வலுக்கட்டாயத்தின் மூலம் ஏற்படுத்திக் கொள்கிறார்கள். அவர்களுடைய முறைகளால் அவர்களுக்கே ஊதியம் கிடைக்கிறது. அவர்கள் சமாதானகாலத் தேவைகளையோ, போர்க்காலத் தேவைகளையோ எதைச் செய்தாலும் அவர்களுக்கே ஊதியம். மேலும் அமைதியான காலத்தில் நடத்தும் தொழில் முறையிலும் போர்த் தேவைகளைச் செய்யும் நிலைமைக்கு உடனே மாற்றிக்கொள்ளும் வசதிகளையே வைத்திருக்கிறார்கள். ஆதலால் இத்தகைய சமூகப் பொருளாதார முறைகளால் ஊதியம் பெறும் இவர்கள், இந்த நிலைமையை மாற்றிச் சீர்திருத்துவார்கள் என்று எதிர்பார்க்கக்கூடாது.

பலர் போர்களைத் தவிர்க்க ஆர்வம் உள்ளவர்களாக இருந்தாலும்கூட, போர் எதிர்ப்புத் திட்டத்தில் தங்களுடைய தனிப் பொறுப்பையும், தங்கள் அன்றாட வாழ்க்கையில் தாங்கள் செய்துகொள்ளவேண்டிய மாறுதல்களையும் அறிவதில்லை. நம்முடைய அமைதி நாட்டமும் (Pacijism) போர் எதிர்ப்பும், பெரிய போர்நடவடிக்கைகளுக்கு எதிராக இருப்பதுமட்டும் போதாது. கூடவே நமது அன்றாட வாழ்வில் கட்டாயங்களுக்கு அடிப்படையான நிலைமைகள் எழாவண்ணம் கவனித்து நடக்கவேண்டும். நாம் நாடோறும் பயன்படுத்தும் பொருள்களும் கருவிகளும் அனைத்தும், அவைகளைச் செய்விப்பதிலும் விநியோகிப்பதிலும் பயன்படுத்துவதிலும் ‘நம் சகோதர மக்களுக்கு எவ்வித தீங்கும் கொடுமையும் விளைவிக்காதனவா?’ என்பதைப் பற்றிக் கவனிக்க வேண்டும்.

பெரும்பாலான மக்கள் அமைதிமனப்பான்மை உடையோராய் இருந்தபோதிலும், அவர்களுடைய அன்றாட வாழ்க்கையில் செய்யும் காரியங்களின் மூலம் தோற்றுவிக்கும் நிலைமை, முடிவில் போரில் கொண்டுவந்து விடும் என்பதை அறிவதில்லை. போர் என்பது திடீர் என்று எழும் இயற்கை நிகழ்ச்சி அல்ல. உதாரணமாக முதல் பெரும்போருக்கும் இரண்டாவது உலகப் போருக்கும் இடையே கழிந்த இருபது ஆண்டுகளும் சமாதான காலம் என்று சொல்லமுடியாது. அந்தக் காலத்தை இரண்டாவது உலகப் பெரும்போருக்கு தயார்செய்துகொண்டிருந்த காலம் என்றுதான் சொல்லவேண்டும். நமது அன்றாட வாழ்க்கையில் போரை எழுப்பக்கூடிய அடிப்படைச் செயல்களை நீக்கினால்தான் உண்மையான அமைதியைப் பெறமுடியும். இல்லாவிடில் ஒற்றுமைக்காலம் என்பது, போர் எழாமலும்

போர் எழக்கூடிய காரணங்கள் மங்கியும் இருக்கும் இடைக் காலமே ஆகும். நமது அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகளில் கட்டாயம் எழக்கூடிய நிலைமைகளை நீக்கினால்தான் உண்மை யான அமைதி கைகூடும். உண்மையைக் கூறுவோமானால், உலகப் போர்கள் எழுவதற்குக் காரணம், பார்ப்பதற்கு அமைதி யாக நடத்தப்படும் நமது குடும்பத்தை நடத்தும் முறைகளி லேயே உளது உலகப் பரவலான சந்தைகளை உடைய பூதா காரத்தொழிற்சாலைகளில் செய்யப்படும் பொருள்களை நமது இல்லங்களில் எவ்வளவு அதிகம் பயன்படுத்துகிறோமோ அவ் வளவிற்கு நாம் உலகப் போர்களை உண்டாக்க உதவுகிறோம். நமது காலைஉணவில் உள்ள பொருள்களைப் பார்த்தால் [கோதுமைப் பூரி, காப்பி, அதற்கு (மில்) வெண்மைச் சர்க் கரை, டின்பால், கைக்குத்தரிசி உணவு, பால், கிராமத்தில் செய்யும் வெல்லம்] நாம் உலக அமைதிக்கு ஆதரவோ, அல் லது உலகப் போருக்குத் தூண்டுதலோ செய்கிறோம் என்பது விளங்கும்.

இந்நிலைமைகளை இவ்விதம ஆராயநதால ஒரு நடைமுறைத் திட்டம் உடனே தென்படுகிறது. இத்திட்டத்தின்படி உலக அமைதியைப் பாதுகாக்கும் பொறுப்பு பெரிய இராசதந்திரி களிடமும் அரசியல் வாதிகளிடமுமிருந்து சாதாரண உலக மக்க ளிடம் மாற்றப்படுகிறது. இத்தகைய அறிவுள்ள நடவடிக்கை மூலம்தான் சாதாரண உலகமக்கள் உலகத்தில் சில ஆண்டு களுக்கு ஒருதரம் எழும் கொடுமையான சூறவளிப் போர் களையும், அவற்றினால் முடிவில் மக்கட்கூட்டமே அழிந்து போவதையும் தடுக்கலாம் இத்தகைய அன்றாட தூய வாழ்க்கைத் திட்டத்தை ஆரம்பிக்க நாம் பெரும்பாலும் தன் னடக்கத்தையும், சொந்தக் கட்டுப்பாடுகளையும் தனிமனித வாழ்வில் கைக்கொள்ளுவதை எதிர்பார்க்க வேண்டி இருக் கிறது. இப்போதைய தன் விருப்பப்படி பல்வேறு விரிவான வேண்டாத வசதிகளை வைத்துக்கொள்வதை விட்டுவிட வேண்டும். இவ்வழியைத்தான் உலகஅமைதி ஏற்படக் காந்தி அடிகள் குறிப்பிட்டார். அவருடைய ஆக்கமுறைகள் (நிர்மா ணத் திட்டங்கள்) என்பவற்றின் மூலம் அவர் செயல்முறை உலக அமைதிக்கு அழைத்துச் செல்லுகிறது. இந்நாளிலிருந்தாவது கண்விழித்து, நாம் எளிய தூயவாழ்க்கை வாழவேண்டும். அதன்மூலம் உலகஅமைதிக்கு அடிகோல வேண்டும். அது நம் நாட்டவருடைய உரிமையும கடமையும் ஆகும். அக் கடமையைச் செலுத்த அறிவுடன் முனைவோமாக.

செய்திகளும் குறிப்புகளும்

கம்பர் நாடக அரங்கேற்றம்

திரு. டி. கே. சண்முகம் மூலம் தமிழுலகிற்கு "ஔவையா"ரை நாடக உருவில் அமைத்து உதவிப் புகழ்பெற்றுள்ள நெல்லைத் திருவாளர், எதிராஜுலு அவர்கள் இறவாத புகழுடைய எழில்நூற்'கம்பனை' நாடக உருவமாக ஆக்கி சோதிநாடக சபா குழுவினர் மூலம் 26-1-51-இல் அரங்கேற்றஞ் செய்துள்ளார்கள். இதற்கு முன்னரும் 'வேலைக்காரன்' என்னும் சமூக சீர்திருத்த நாடகமும் ஆக்கி உதவியுள்ளார்கள். இது போன்ற அரும்பெரும் தமிழ்ப்பணி செய்துவரும் அவர்களின் ஊக்கங்கண்டு மகிழ்வெய்துகின்றோம். அவர்கள் இன்னும் இவை போன்ற நாடக நூல்கள் ஆக்கி உதவி நீடுவாழ்வார்களாக!

கல்விக் காப்பு

மக்களை மாக்கள் நிலையினின்றும் உயர்த்தி மக்களாக வாழச்செய்வது 'கேடில் விழுச் செல்வமாம் கல்வி'யே ஆகும். அதை நல்ல முறையில் பரப்புதற்காம் நன்கொடை வழியொன்றை 'உலகவாம்' பெருந்திருவினர் குடியாத்தம், திரு. இராசகோபால நாயுடு அவர்கள் செய்தமைத்துள்ளார்கள். இந் நன்முறையைப் பின்பற்றி தமிழகப் பெருஞ் செல்வர் முன் வருவார்களாயின், தமிழ்நாடும் தமிழ்மொழியும் தமிழரும் நல்வாழ்வுபெற்று உய்வார்கள். அம்முறை யாது?

"திரு. இராசகோபால் கல்வியமைப்பு" என ஒன்று ஏற்படுத்தியுள்ளனர். இதன் பொறுப்பாளர் திரு நாயுடு அவர்கள், அவர்தம் அருமை மனைவியார் திருமதி, இலட்சுமிகாந்தம்மாள், ஆம்பூர் டாக்டர், நாதமுனி நாயுடு, திரு. ஏ. ஜே. ஜே. அருணாசல முதலியார் ஆவார்கள். நிலப்பொறியூர்தியாம் எழு பஸ்களை வழங்கியுள்ளனர். இதன் ஆண்டு வருவாய் இருபத்தையாயிரம். இதிலிருந்து பள்ளிக்கூடம் நடத்தப்படும். முப்பது ஏக்கா நிலத்தில் கட்டடம் கட்டப்படும். இஃது இரு பாலாருக்கும் சேர்ந்த உயர்நிலைப்பள்ளியாய், கல்லூரியாய்த் திகழும்.

திரு. திவாகர் கூற்று

இந்திமொழியின் அடக்கி ஆளும் ஆட்சி (ஏகாதிபத்தியம்) ஏற்பட்டுவிடுமோ என்று தென்னிந்தியர்கள் சிலர் அஞ்சுகின்றார்கள். இந்தியைக் கற்றுக்கொள்வதற்கு அங்கு இன்னும் சில உண்மையான சங்கடங்களும் இருக்கின்றன. இந்திமொழியைக் கற்கத் தென் இந்தியர்களுக்குப் போதுமான கால இடையீடு கொடுக்கப்படுதல் வேண்டும். தாங்களும் தேசிய மொழியான இந்தியை வளம்படுத்த உதவமுடியும் என்ற நம்பிக்கையைத் தென் இந்தியர்கள் உள்ளத்தில் ஏற்படுத்தல் வேண்டும். எந்த முறையில் இந்தி வளர்ச்சியுற வேண்டும் என்பதில் எந்த இந்தி மாகாணமும் கட்டுப்பாடு கூற முயற்சிப்பது முறைமை ஆகாது. தென் இந்திய மொழிகளுள் ஏதாவது ஒன்றை வட இந்தியர்கள் கற்றுக்கொண்டு அதை வளர்க்க முயற்சித்துத் தென் இந்தியர்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்தல் வேண்டும். தென் இந்திய மொழிகளிலுள்ள உயர்ந்த நூல்களை இந்தியில் மொழிபெயர்க்க வேண்டும். இவ்வகையால் தென் இந்தியர்கள் உள்ளத்திலுள்ள நம்பிக்கை யின்மையைப் போக்குதல் வேண்டும்.

பலித் தடை

ஈவிரக்கமற்றுச் செய்துவந்த ஆடு கோழி முதலிய உயிர்ப்பலியைத் தடை செய்யும் 1950-ஆம் ஆண்டுச் சட்டம் இராட்டிரபதியின் இணக்கம் பெற்றுவிட்டது.

மொழி ஆய்வு

வழக்கத்திலுள்ளதை விரைவில் நீக்கிவிட வேண்டுமென்று கொண்டது விடாக் குருட்டுச் செய்கை பொருந்தாதெனத் திரு. இராஜாஜி அவர்கள் இலட்சுமணபுரிப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் பகர்ந்தமை பாராட்டற்குரியதே.

தெய்வ ஆற்றல்

பெங்களூரில் வாழும் குமாரி சகுந்தலா தேவி கண்ணொடித் தரும் கணக்கில் அனைத்துலகத்தும் எவர்க்கும் இல்லாத் தனித்திறல் பெற்று விளங்குகின்றாள். அகவை பத்தொன்பதே ஆகின்றது. நனி நாகரிக மேனாடெல்லாம் சென்று ஆங்குள்ளாரனைவரும் மிகுவியப்பும் பெரும் விழி விழிப்பும் ஒருங்கெய்தச் செய்துளாள்.

பெண் கல்வி

ஐதராபாத்—அனைத்திந்திய கல்வி மாநாட்டின் இருபத்தைந்தாவது கூட்டம் நிகழ்ந்தது. மாதா பிரிவுகருத் தலைமை தாங்கிய திருவாட்டி யமுனாபாய் சொற்பொழிவு : "பெண்களுக்கு எழுதப் படிக்கக் கற்றுக் கொடுப்பதுடன் தொழில்களிலும், நாட்டுத் தொண்டிலும் தங்கள் கருத்தைத் தெரிவிக்கக் கூடிய திறமை வாய்க்கவும் கற்பிக்க வேண்டும். ஐம்பது ஆண்டுகளாக பெண்கள் கல்வி மிகுதியும் பரவியிருப்பது மகிழ்ச்சியே. ஆயினும் முதன்மை (உத்தியோகம்) வேட்கையில் வீட்டைப் புறக்கணித்தல் கூடாது. தேர்வில் தேற வேண்டுமென்னும் பித்தும், கல்வியின் நிலை உயர வேண்டும் என்னும் பெத்தும இளம் பெண்களின் உடல் நலத்தைக் கெடுக்கின்றன. ஒழுக்கம் வளரும் முறையில் கல்வி இருக்கவேண்டும். நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் நாற்பெரும் பண்புகள் நாளும் ஓங்கும் நிலையில் நம் நாட்டுப் பெண்கல்வியின் குறிக்கோள் அமைய வேண்டும்," என்பதே.

இருபாலாரும் ஒருங்கு கற்றல்?

லக்ஷ்மணபுரி, பல்கலைக் கழக மாணவா கூட்டத்தில் பம்பாய் ஆட்சியாளார் ராஜா மகாராஜ் சிங் பேசினார். அப்பொழுது ஆண்களும் பெண்களும் சேர்ந்து படிக்கலாமா? என்று வினவினர். ஆண்கள் நன்றாகப் படிக்கலாமென்றனர். ஆனால் பெண்கள் பேசாதிருந்தனர்.

பிள்ளைப்பேறு மகிழ்ச்சி

நம் கழக ஆட்சிப்பொறுப்பாளர் அவர்களின் மருகரும், கழக மேலாளருமாகிய திரு. க. சொக்கலிங்கம் பிள்ளையவர்கட்குப் பாளையங்கோட்டையில் தம் மாமனார் இல்லத்து 22-2-51 வியாழக்கிழமை இரவு 7-47 மணிக்கு ஆண்குழந்தை பிறந்து சேயும் தாயும் நல்ல நலமாக இருக்கின்றார்கள் என்னும் செய்தி கேட்டு மகிழ்கின்றோம். கடவுள் எல்லா நலமும் அருள்வாராக.

மதிப்புரை

சித்தர் சித்தாந்தம்:

இது, பழனி நவதீர்த்த சாதுமாமுனிவர் நினைவு மலர் ஆக அத்திரு மடத்துத் தலைவர் அடிகள் நாகப்பூர்சுவாமி அவர்களால் வெளியிடப்பெற்றது. அழகான பதிப்பு. தொன்மைச் சித்தர்கள் கொள்கைகளை நன்மை பயப்பன என விளக்குகின்றது. தக்க மேற்கோள்கள் காணப்பெறுகின்றன. அடிகள் விமலானந்தா அவர்களால் இயற்றப்பட்டது. அடிகள் பொன்னம்பலசிவம் அவர்களின் திருக்குறள் வாழ்த்து வண்ணப்பாவும் பொருந்தியுள்ளது. திருமடத்தார் இவை போன்ற செந்தமிழ் வெளியீடுகள் பல வெளியிட்டு, மக்களின் நன்னெறிக்குத் துணைபுரியும் மாண்பு மற்றெல்லா மாண்புகளினும் சிறந்தது.

வலம்புரி வடுகநாதன் உயர்நிலைப்பள்ளி

குறித்த பள்ளியின் 1948-50 ஆண்டு அறிக்கை வரப்பெற்றோம். இக் கல்லூரி, திருவாளர் வடு லெ. இலக்குமணச் செட்டியார், வயி. வ. வடுகநாதன் செட்டியார் இவர்கள் குடும்பத்தார்களின் சொலற்கரும நன்முயற்சியால் நிலைபெற்று நிகழ்வதாகும். ‘கேடில் விழுச்செல்வம் கல்வி’ என்பது இவர்கள் உள்ளத்தெழுந்த ஊற்று. அறிக்கையில் பள்ளிக்கூடம் நிறுவிய 1944 முதலாகவுள்ள நிகழ்ச்சிகள் காணப்பெறுகின்றன. எல்லா ஆண்டுகளின் தேர்வுகளும் போற்றற்குரிய முதன்மை நிலையிலேயே காணப்பெறுகின்றன. இப்பொழுது ஆசிரியன்மார் இருபத்தொருவர், அலுவலாளர் இருவர், மாணவர் ஐந்நூற்றுப்பதின்மர் உளர். மாணவர் திறமையை விளக்கும் கட்டுரைகள் பலவும் காணப்பெறுகின்றன. திருவருட்டுணையால் விரைவில் தக்க கட்டடமும் அமைந்து முதன்மைக் கல்லூரியாகவும் நிலவுக.

அறுபத்துமூவர் துதிப்பா.

இந்நூலாசிரியர் தணிகைமணி, இராவ்பகதூர், திரு. வ. சு. செங்கல்வராய பிள்ளை எம். ஏ. அவர்கள் ஆவர். அவர்கள் அப்பரை அனைய செப்பரும் தவத்தார். திருப்புகழை ஓதி உலகுக்குதவி ஓங்கிவாழ் குடும்பத்தார். பல நூலியற்றித் தமிழனைக்கு அணிவித்துவரும் பொய்யில் புலவர். செந்நெறிக்கு ஈடும் எடுப்புமில்லாத சிந்தாமணி விளக்காய் நின்றிலகும் ‘தேவார ஒளிநெறி’ என்னும் நாவாற்பெருநூல் நல்கிய நற்றொண்டர்.

இவர்கள் தம் இளவலின் தூண்டுதலால் அறுபத்துமூன்று நாயனமார்களின் வரலாற்றுக் குறிப்பை அறுபத்துமூன்று வகையான ஓசைநயம் பெறும் ஒழுகிசைத் திருப்பாட்டுக்களால் இந்நூற்கண் யாத்துள்ளார்கள். இத்திருப்பாட்டுக்களை பண்ணமையப் பாடுதற்கு வாய்ப்பாக நால்வர், தாயுமானுர், காரைக்கால் அம்மையார் முதலியோர் பாடியருளிய திருப்பாட்டின் ஓசையோடு அமைத்துக் காணுமாறு இணைப்பாகப் பாவிளக்கம் ஒன்று தந்துள்ளார்கள். நாயன்மார் வரலாற்றுக்கண் பாவிலமைந்த சிறந்த குறிப்பு விளக்கமும், பாவின் உரையும் செம்மை உரைநடையால் செய்தமைத்துள்ளார்கள். இந்நூல் நாயன்மார் வரலாற்றுக்கு வழிகாட்டி, வழிபாட்டுக்குக் கருவூலம் ஆகும். நாற்பத்தொரு யாண்டுகளுக்குமுன் திருவிளையாடல் அறுபத்துநான்கினையும் எண்ணெண்வகைப் பாவால் இயற்றியுள்ளார்கள் என்றும் தெரிகிறது. இவர்கள் குடும்பம் முற்றுக ஏறூர்ந்தான் இவர் மகனுர் எழிலடியார் திருத்தொண்டே இயற்றிவருவதுகாணின், எவர்தாம் வியவார் நயவார் இன்புறார். இவர்கள் நீடுவாழ்ந்து பெருந்தொண்டியற்றிப் பீடுறப் பெண்ணொருகூறன் அருள்வானாக. விலை அணா எட்டு

அண்ணல் காந்திஅடிகள் வெண்பாமாலை,-நால்வரும் இராமலிங்கரும்:

இவ்விரு நூற்களின் ஆசிரியா திரு. வித்துவான் குமரகுருபரதாச கவிராய பரம்பரை இராசவரகவி பூவை, அ. இராசகோட்டியப்பன் அவர்கள் ஆவர். முன்னது செய்யுளும் பின்னது உரைநடையுமாக அமைந்துள்ளன. முன்னது காந்தியடிகளின் பண்பும் தொழிலும் பழந்தமிழர் கையாண்டனவற்றுடன் பெரிதொத்துத் திகழ்கின்றன எனபதும், அடிகள் வழியே உலகுய்தற்காம் பொதுவழியாம் என்பதும் வள்ளுவர் வாய்மொழியுடன் ஆங்காங்கே எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. பின்னது நால்வரைப் பற்றி இராமலிங்கர் உருகிப்பாடிய கோடையூற்றுச் சுவைப்பா அடியொற்றித் திறம்பெற வரையப்பெற்றுள்ளது. இந்நாளில் இத்தகைய நூலும், கடவுட்பற்றும் கலங்கா வுளமும் நலங்காண் திறனும் வாய்ந்த இத்தகைய ஆசிரியர் போன்றுரே வேண்டற்பாலர். தமிழுலகம் ஆசிரியரை ஊக்கிப் பல நூல் வெளிவரச்செய்யத் துணைபுரியுமாக.

திருவொற்றி வடிவுடை அம்மை அருள்வேட்டல்

இந்நூலாசிரியர் பெரும்புலவர் பாரிப்பாக்கம் திரு. கண்ணப்ப முதலியாரவர்கள் ஆவர். அம்மை திருவருளால் தாம் பெற்றுள்ள இடக்கை நோய் நீங்கி எழிலுறும் இன்பத்தினை நினைந்துருகிப் பாடிய பாமாலையாகும் இது. அழகிய இனிய தெளிந்த இன்னோசை நிரம்பிய நூற்றொரு பாட்டுகளையுடையது எளியநடை வாய்ந்தது. பொருட்செறிவு மிக்கது 'செம்பொருட்டுணிவாம்' சித்தாந்தக் கருத்துக்கள் இடம் இடந்தோறும் சிறந்து விளங்குகின்றன. குறிப்புரை மிகத் தெளிவாகவும் விளக்கமாகவும் இருக்கின்றது. 'அருச்சனைபாட்டேயாகும்' என்னும் தமிழ்மரபு இன்னுந் தழைத்திருக்கின்றது என்னும் மெய்ம்மை இதனல் விளங்கும். புத்தகம் அழகாக அச்சிடப்பெற்றுள்ளது. செந்நெறிச் செல்வர்கள் ஒவ்வொருவரும் வாங்கிக் கற்றுத்தொழுது அம்மை அருட்கு உரியராகுக.

தமிழ்த்தென்றல் 1950 ஆண்டுமலர் (விருதுநகர்):

இம் மலர் தலைசிறந்த அறிஞர் பலர் ஆர்வமூட்டும் வகையில் வரைந்துள்ள கட்டுரைகள் பலவற்றைக்கொண்டு திகழ்கின்றது. ஆண்மையும் இயற்கைநலமும் ஒப்புரவும் ஊட்டக்கூடிய நன்னடைவாய்ந்த நறுஞ் செய்யுட்கள் பல காணப்படுகின்றன. புலவர் பெருமக்கள், இயற்கை வனப்பு முதலிய அழகிய உருவப்படங்கள் நல்லமுறையில் பல அமைந்துள்ளன. விலை, ரூ. 1 4 0.

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகத்திற்காக, சென்னை 2/140, பிராட்வே,
அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால்
அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா.